# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 37வது கூட்டறிக்கை 2021.03.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 37வது அமர்வு 2021.03.09 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 37வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமானால் அவைகளை சுட்டிக்காட்டலாம். இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 18வது பக்கம் நான் பேசிய பேச்சில் ஒரு பந்தியே இல்லாமல் போய்விட்டது. அதை முடித்திருக்கின்றது எங்களது பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி கேட்டதற்கு கொண்டிருக்கிறார்கள் என்று முடித்திருக்கின்றது. நீங்கள் இப்போது ஏசுகின்றீர்கள் இந்த சட்டத்திற்கு என்று இல்லை. 20வது சட்டத்திற்கு ஒப்பமிட்டுள்ளவர்களை எதன் அடிப்படையில் ஒப்பமிட்டுள்ளார் என்று உங்களுக்கு தெரியுமா? 04 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒப்பமிட்டதற்கு இவ்வாறு பேசிவிட்டு ஒப்பமிடாவிட்டால் 04 மடையர்கள் ஒப்பமிடாதால்தான் இந்த ஜனாசா எரிக்கப்பட்டது என்று சொல்வார்கள் என்ற வசனம் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த சபை அமர்வின் போது எனது உரையில் இணைந்த பல்கலைக்கழக கல்லூரி என்று நான் குறிப்பிட்டு இருந்தேன். அதை உடைந்த பல்கலைக்கழக கல்லூரி என்று இருக்கின்றது. அது மாத்திரமல்ல எனது உரையை முழுமையாக வாசித்துப் பார்த்திருக்கின்றேன். அதே நேரத்தில் முன்கூட்டியே அதன் ஒலி பிரதியையும் நான் பெற்றுக் கொண்டேன். அதனுடன் ஒப்பிடும் போது மிகவும் வேதனையான முறையில் எனது உரை பதிவு செய்யப்பட்டு இருக்கின்றது. பல தவறுகள் பல பிழைகள் இருந்து கொண்டிருக்கின்றது. சம்மந்தம் இல்லாத நிலைகள் எல்லாம் அதில் தெளிவுபடுத்தப்படுகின்றது. ஆகவே எனது உரையை தயவு கூர்ந்து தவறு ஏற்படுவதுதான் எவ்வாறான தவறாக இருந்தாலும் எனது உரையை முழுமையாக கேட்டு அதனுடைய வடிவத்தை மீண்டும் பிரசுரிக்கப்பட வேண்டும். பிரசுரித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் அது கிடைக்கப்பெறச் செய்யப்பட வேண்டும் என நான் விரும்புகின்றேன். அல்லாது போனால் எனது உரையை நான் தெளிவுபடுத்த வேண்டிய சில நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்படலாம் என கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கூட்டறிக்கை உண்மையாக பாராளுமன்ற ஹன்சார்ட் மாதிரி பிரதேச சபையின் உரைகள் பதிவு செய்யப்பட தேவையில்லை என்று இருந்தும் இந்த சபையில் வழக்கமாக அந்த முழு உரையும் பதியப்படுகின்றது. சில வேளைகளில் அதில் சில பிழைகள் இருக்கலாம். நாளை நான் அறிந்தமட்டில் செயலாளர்கள் எல்லோருக்கும் தனி அமர்வு கூட்டறிக்கை சம்மந்தமாக இருக்கின்றது. ஏனென்றால் நமது சபை மட்டுமல்ல பல சபைகளிலும் இந்த கூட்டறிக்கை பதிவதில் சில பிரச்சினைகள் ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அது சுருக்கமாக எப்படி செய்யலாம் என்ற ஒரு வழிகாட்டல் நாளை அமர்வில் வெளிவரும் என்று நினைக்கின்றேன். ஆனால் நீங்கள் கூறியவாறு முக்கியமான கருத்துகள் திரிவுபடாமல் அது பதிய வேண்டும் என்பது தேவை. அதனால் ஏதாவது பிழைகள் இருக்குமானால் நீங்கள் எழுத்துமூலம் சபைக்கு சமர்ப்பிக்கும் போது அதை ஒலி நாடாவுடன் ஒப்பிட்டு பார்த்து அந்த திருத்தங்களை செய்யலாம். இந்த கூட்டறிக்கை உறுதிப்படுத்துவதற்கு முதல் கௌரவ உறுப்பினர் கூறியவாறு கௌரவ உறுப்பினர் சரிபா, கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்களினது உரையை திருத்தங்கள் செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது கருத்திலும் சில மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கின்றது. அதனையும் கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது என்ன என்று எழுத்து மூலம் அறிவித்தால் திருத்தங்களை செய்யலாம்.

கடந்த கூட்டறிக்கையினை

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை திருத்தங்களுடன் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற கிழமை ஜனாசா நல்லடக்கம் பற்றி சில கருத்துகள் சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்பட்டது. அந்த கருத்துகளுக்கு அது உண்மைக்கு முரணான படியினால் அதற்கு நான் உத்தியோகபூர்வமாக எந்தபதிலையும் கொடுக்க விரும்பவில்லை அதுவும் சமூக வலைத்தளங்களில். அது பல கோணங்களில் பேசப்பட்டு இன்று நான் அறிந்தமட்டில் அந்த பதிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதில் உங்கள் எல்லோருக்கும் தெரியும் சென்ற வருடம் ஏப்ரில் மாதத்தின் பின்பகுதியில் பிரதம மந்திரியின் காரியாலயத்தில் இருந்து என்னிடம் ஒரு

வேண்டுகோள் விடுக்கப்பட்டதனால் சம்மாந்துறை முச்சபைகள், நீர்வழங்கல் சபை, நீர்ப்பாசன திணைக்களம் எல்லோரையும் கூட்டி முஹல்லா மஹல்லா மையவாடியில் இந்த ஜனாசாக்களை அடக்குவதற்கு நாம் ஊரின் சம்மதத்தைப் பெற்று மே மாதம் சபை அமர்வில் அதை உத்தியோகபூர்வமாக ஏகமனதாக ஏற்று அறிவித்திருந்த நிலையில் அரசுக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக அதை உத்தியோகபூர்வமாக அரசு பல கோணங்களில் ஆராய்ந்து அதன் ஒரு அம்சமாக நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ வாசுதேவ நாணயக்காரர் அவர்கள் புவியியல் நிறுவனத்திடம் டிசம்பர் 09 ஆந் திகதி பின்வரும் இடங்களை பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு எழுத்து மூலம் கேட்டிருந்தார்.

அதன் முதல் இடம் 1:1 அம்பாரை மாவட்டம் சம்மாந்துறை மலையடிக்கிராமம், 1:2 அம்பாரை மாவட்டம் இறக்காமம், 1:3 அம்பாரை மாவட்டம் பொத்துவில், 2:1 திருகோணமலை மாவட்டம் கிண்ணியா, 3:1 புத்தளம் மாவட்டம் புத்தள பிரதேச சபை, 4:1 மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடி, 5 மன்னார் மாவட்டம் முஸல்லி பிரதேசம். இந்த பிரதேசங்களை சுட்டிக்காட்டி இந்த இடங்களுக்கு அவர்களின் அறிக்கையை தருமாறு கோரி அந்த அறிக்கை 12ம் மாதம் 11ஆந் திகதி அவருக்கு வழங்கப்பட்டதை அடுத்து அந்த அறிக்கையின் அடிப்படையில் தான் இந்த ஜனாசாக்களை அடக்கும் முடிவு எடுக்கப்பட்ட போது அந்த இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. சம்மாந்துறை முஹல்லா மஹல்லா மையவாடியை பொருத்தமட்டில் எல்லோருக்கும் தெரியும் அம் மையவாடியில் சில இடங்களில் ஒரு அடிக்குள் மலைப்பாரை இருக்கின்றது. சில இடங்களில் மலைப்பாரை வெளியே தெரிகின்றது. சில இடங்களில் 03 அடி, 04 அடி சில இடங்களில் 04 மீற்றர் இற்கு கீழும் இருக்கின்றது. அதனால் மழை காலத்தில் அந்தப் பகுதியில் நீர் நில மட்டத்தில் இருக்கும் சாத்தியங்கள் இருக்கின்றது. இப்படியான ஜனாசாக்கள் அடக்குவதற்கு அவர்களின் நிபந்தனைகளில் ஒன்று ஜனாசா அடக்கும் இடத்தில் இருந்து 250 மீற்றருக்கு அப்பால்தான் ஏதாவது நீர் வழங்கல் இருக்க வேண்டும். அடுத்தது குடியிருப்பு காணி இருக்க முடியாது. அந்த நிபந்தனைகளுக்கு இது பொருத்தம் இல்லாதது அடிப்படையில்தான் ஓட்டமாவடியையும் அதன் பின் இறக்காமமும் தெரிவு செய்யப்பட்டது.

சம்மாந்துறையில் மரணித்த மர்ஹூம் இப்றாஹீம் ஆசிரியர்களின் குடும்பத்தவர்கள் என்னிடம் வந்து அதற்கு அனுமதி கேட்ட போது நான் அவர்களுக்கு விளங்கப்படுத்தியது இது சபையினால் கொடுக்கும் அனுமதி அல்ல. ஏற்கனவே சபை அந்த விருப்பத்தை தெரிவித்து விட்டது. இந்த முடிவு அரசினால் எடுக்கப்படுவது. இன்றுகூட அவர்கள் இருக்கும் போதே அவர்கள் வருவதற்கு முன்னர் Doctor கபீர் என்னிடம் தொடர்பு கொண்டு மையவாடியை சென்று பார்வையிடுவதற்கு என்னையும் வரும் படி கூறி, நாங்கள் எல்லோரும் சென்று Doctor ஆரிப் Epidemiologist, Doctor கபீர், நான், மர்ஹூம் இப்றாஹீம் ஆசிரியர் அவர்களின் குடும்பத்தவர்கள் எல்லோரும் சென்று பார்த்து அவ்விடத்தில் இருந்து மாகாண சபையின் அத்தியட்சகருக்கு அறிவித்தல் கொடுத்து சம்மாந்துறையிற்கு எடுக்க முயற்சி நாங்கள் சிபார்சு செய்தும் புவியியல் திணைக்களத்தின் அறிக்கையின் படிதான் அவ் இடம் தெரிவு செய்யப்பட்டது. இதை தெரியாமல் சிலர் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் அனுமதி கொடுப்பதற்கு மறுத்துவிட்டார் என்ற கதையை பரப்பி வீண் சர்ச்சையை ஏற்படுத்தி இன்று அது பல இடங்களில் தெளிவு காணப்பட்டு இருக்கின்றது. நான் அறிந்தமட்டில் Doctor ஆரிப் Epidemiologist கூட அவரின் கருத்துகளை தெளிவாக சம்மாந்துறை பிரதேச சபை எல்லா முயற்சிகளும் எடுத்தது என்பதை அறிவித்து இருந்தார். இதை நான் இந்த சபையில் கூறுவதற்கு காரணம் பல கௌரவ உறுப்பினர்கள் நான் இதைப்பற்றி சபையில் விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதனால்தான் இதை விளக்கினேன்.

எமது சபையினால் LAPDP இது Community Centers, சமூகத்தை மையமாக வைத்து அந்த திட்டங்கள் மீண்டும் தீட்டப்பட வேண்டும். இதில் எதிர்காலத்தில் LDSP, உலக வங்கி உதவிகள் நமக்கு தரப்படும் போது இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். எமது சனசமூக நிலையங்களை மையமாக வைத்துதான் அது செய்யப்படும். அதனால் கௌரவ உறுப்பினர்கள் நமது CDO உடன் இணைந்து ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மக்கள் பங்களிப்போடு ஒரு

தெளிவான முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று வினயமாக கேட்டுக் கொள்கின்றேன். அடுத்ததாக நமது சபையின் இன்றய நிதி உங்களுக்கு தெரியும் சென்ற 03ம் மாதத்தில் இருந்து நமது வருமானம் நாம் எதிர்பார்த்தது போல் நமக்கு வந்து சேரவில்லை. அதனால் நமது நிதியை கவனமாக நாம் பரிமாறாவிட்டால் நமக்கு நிதி நெருக்கடி ஏற்படலாம். 28.02.2021 ஆம் ஆண்டுக்கு இப்போது கையிருப்பாக Deposit இனை தவிர சபையின் பணமாக கையிருப்பில் இருப்பது 18.7 மில்லியன். அதில் நமக்கு மாதாந்தம் அடிப்படை செலவுகள் 4.2 மில்லியன். ஏறத்தாள 04 மாதத்திற்குரிய செலவீனத்திற்குரிய இருப்பு எம்மிடம் இருக்கின்றது. அதே போல் சென்ற வருடத்திற்குரிய, 2019ம் ஆண்டின் 05 மாதத்திற்குரிய முத்திரை தீர்வு ஏறத்தாள 08 மில்லியன் வர வேண்டியதாக இருக்கின்றது.

அதை கருத்திற் கொண்டு இந்த வருடம் நாம் கவனமாக இந்த நிதியை கையாளுவோமானால் இந்த வருடத்தில் நாம் ஓரளவு சர்ச்சை இல்லாமல் எமது நாளாந்த நடவடிக்கைகளை எடுத்து செல்லக்கூடிய நிலவரம் இருக்கின்றது. அதனால் நமது அபிவிருத்தி வேலைகள் செய்யக்கூடிய சந்தர்ப்பம் நமக்கு பெரிதாக இருக்காது. உங்களுக்கு தெரியும் நாளாந்தம் பழைய கல்வெட் ஒவ்வொன்றாக இடிந்து விழுகின்றது. அதை கட்டாயமாக நாம் திருத்த வேண்டிய அழுத்தம் இருக்கின்றது. அதனால் அவ் வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இயலுமான முறையில் சபைக்கு வருமானத்தை கூட்டக்கூடிய அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கு உங்களின் ஆதரவை நாடுகின்றேன். இன்னுமொரு விடயம் இதில் நானும் பங்குபற்றியதனால் இதை உங்களுக்கு எடுத்து வைக்க வேண்டும். அரசாங்கத்தினால் பிரதேச செயலாளர்களுக்கு பிரதேச செயலக எல்லைக்குள் எல்லை நிர்ணயம் செய்வதற்கான முன்மொழிவுகள் பிரதேச செயலகம் மூலமாக அவர்களின் முன்மொழிவுகளை கேட்டிருந்தார்கள். அதில் சம்மாந்துறை பிரதேச செயலகம், சிவில் அமைப்புகளுடன் சேர்ந்து 03 முன்மொழிவுகள் வைத்திருக்கின்றார்கள். அதன் விபரங்கள் என் கைவசம் இருக்கின்றது. இதை சபையில் ஏனென்றால் அடுத்த கட்டம் சபையிடமும் பொது மக்களிடமும் இந்த சிபார்சுகள் கேட்கப்படும். அந்த கட்டத்திற்கு வார நேரம் சபையினால் நாம் முன்மொழிவுகள் வைக்க வேண்டிய தேவை இருக்கும்.

அதனால் இதற்கு ஒரு பிரத்தியேக கலந்துரையாடலை உருவாக்கி நான் இதில் Soft Copy உம் எடுத்து வைத்திருக்கின்றேன். அதை நாம் ஆராய்ந்து ஏனென்றால் எல்லை நிர்ணயத்தில் இன்று வரை எமது சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது ஒரே ஒரு முன்மொழிவு கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களினால் சென்னல் கிராமம் - 02 பிரிக்கப்பட வேண்டியது. அதே போல் பல கிராம சேவக பிரிவுகள் ஒன்றிணைக்க வேண்டிய தேவைகளும் எதிர்காலத்தில் ஏற்படும். ஏனென்றால் அரசாங்கம் நிர்வாகச் செலவுகளை குறைக்கும் நோக்கத்திலும் எல்லை நிர்ணயம் செய்வதற்கு எத்தனிக்கின்றார்கள். அதனால் நாமும் அதை ஆழமாக படித்து நமது பங்களிப்போடு நாமும் ஒரு முன்மொழிவை வைப்பதற்கு தயாராக வேண்டும். அதற்காக நாம் இந்த மாதத்திற்குள் இயலுமானால் ஒரு அமர்வை வேலை நாட்களில் அல்லது சனிக்கிழமை ஒன்று சேர்ந்து இதை செய்வதற்கு நீங்களும் முக்கியமாக உங்கள் வட்டாரங்களில் பொதுவாக இந்த ஊரில் எப்படி நிர்வாக எல்லைகள் மீளமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துகளை நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கின்றேன்.

அடுத்த அம்சமாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 500 பொதுப் பயன்பாட்டுச் சேவை செந்நெல் கிராமம் - 02 டிரான்ஸ்போமர் வீதியில் மழை நீர் தேங்குவதை தடுப்பதற்காக கட்டிட இடிபாடுகளைக் கொண்டுவந்து கொட்டுவதற்கான ட்ராக்டர் கூலி, இதில் சொல்லப்பட்ட விடயம் அது சம்மந்தமான தொழில்தான் நானும் செய்வதனால் இதைப்பற்றிய போதிய விளக்கம் தரலாம் என்று நினைக்கின்றேன். இந்தக் கட்டடம் இடிப்பது என்பது அதை 02 அடிப்படையில் செய்வோம் நாங்கள். ஒன்று ஒப்பந்த அடிப்படையில் அல்லது உடைத்து கொடுத்தால் அவர்கள் Transport செய்வது. உடைத்துக் கொடுத்து Transport செய்வது அவர்கள் எங்கு என்றாலும்

கொட்டுவார்கள். அல்லது நாங்கள் அதை ஒப்பந்த அடிப்படையில் பேசி எடுத்தோம் என்றால் அதை எங்கு என்றாலும் கொட்டுவோம். ஆகவே இதற்கு Transport கூலி என்று நாங்களாக பேசி தீர்மானிப்போம். ஆனால் கொட்டப் படுகின்ற இடம் உடைக்கின்ற வீட்டுக்காரவருக்கு தேவை. வீட்டை உடைத்தால் அதை எங்கு கொண்டு கொட்டுவது என்பதை வீட்டுக்காரருக்கு ஒரு இடம் தேவை. அதை நாங்கள் தான் தேடி எடுப்போம். ஆகவே இதற்கு காசு கொடுத்து கொட்ட வேண்டிய அவசியம் இருந்திருக்கமாட்டாது. வீட்டை உடைத்தால் அந்த கல், மண்ணை எங்கயாவது ஒரு இடத்தில் கொட்ட வேண்டும். அது வீட்டுக்காரரின் கடமை. அதை Contract பேசி நாம் எடுத்தோம் என்றால் அதை நாங்கள் எங்கு என்றாலும் கொண்டு கொட்ட வேண்டும். கொட்டுபவர் இலவசமாகத்தான் கொட்ட வேண்டும். அதற்கு Transport கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை வீட்டுக்காரவர் செய்வார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப் பாதையில் பல கட்டடங்கள் கௌரவ உப தவிசாளரின் முயற்சியில் கூட ஒரு பகுதி நிரப்பப்பட்டு செய்தது. இவர்கள் இடிக்கப்போகின்றார்கள் என்று தெரிந்து நாம் போய் பேசி அதுவும் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் முயற்சியில் செய்யப்பட்டது. இது எமக்கு தேவை இல்லாவிட்டால் நாம் கல் போட்டு நிரப்ப வேண்டும். அந்த செலவுக்கு பதிலாக இதை கொட்டுவதினால் உண்மையாக அது சபைக்கு மிச்சம். நாம் சொல்லி நாம் விரும்பிய இடத்தில் போடுவதில்லை. ஆனால் நாம் விரும்பிய இடத்தில் போடுவதற்காக Transport செலவை சபை ஏற்றுக்கொண்டது. ஏனென்றால் அதை எமது பாதையில் போட்டு நானும் சென்று பார்த்திருக்கின்றேன் அது மிகவும் நன்றாக செப்பனிடப்பட்டிருக்கின்றது. நமக்கு தேவையான இடத்திற்கு கொண்டு போக வேண்டும் என்பதற்காகத்தான் அதற்கு நான் உடன்பட்டேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீடு உடைப்பவர்கள் அதை எங்கு கொண்டு கொட்டுவது, யாருடைய வளவுக்குள் கொட்டுவது என்று திண்டாடுகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் நினைக்கின்றேன் அதற்கு போட்டி இருக்கின்றது. நான் மிசன் வளவு வீடு கட்டும் போது எத்தனையோ பேர் வட்டைக்குள் போடுவதற்கு என்னிடம் வந்து சண்டை பிடித்தார்கள் எடுத்துக்கு போவதற்கு, இதை தாங்கள் பண்டுகளுக்கு கொண்டு போட வேண்டும் என்று, போடுவதற்கு திண்டாட்டம் இருக்கும் என்று நான் நினைக்கின்ற மட்டில் அப்படி இல்லை. ஆனால் என்னைவிட அதில் உங்களுக்கு நல்ல அறிவு இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கண்டிப்பாக கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையாக மக்கள் எங்கு போடுவது என்று திண்டாடுகின்றார்கள். சிலரின் வளவுகளுக்குள் போட்டால் எங்களது வளவுக்குள் போடாதீர்கள் என்று சொல்வதற்கும் இருக்கின்றார்கள். சில இடங்களில் நீர்ப்பாசனத்திற்கு சொந்தமான இடங்களில் போட்டால் ஏன் போட்ட என்று கேட்கின்றார்கள். Irrigation Approval எடுக்க வேண்டும், அதைப்பற்றி கதைக்க வேண்டும் என்று நிறைய பிரச்சினைகள் இருக்கின்றது. உண்மையாக போட வேண்டும் என்றால் எத்தனையோ இடங்களில் போடலாம். அதற்காக இவ்வளவு செலவளிக்க வேண்டும் என்று இல்லை. அடுத்தது 40000.00 ரூபா காசு என்பது சபைக்கு சொந்தமான வாகனங்களும் இருக்கின்றது. அந்த வாகனங்களை பயன்படுத்தி செய்திருக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் சபையின் வாகனங்கள் பாவிக்க இயலாத நிலை. ஏனென்றால் எம்மிடம் உள்ள 05 Tractor இல் ஒன்றும் எடுக்க இயலாது. அந்த காலகட்டத்தில் எல்லாம் ஆளங் குளத்திற்கு கொண்டு போனது. இது சபைக்கு நன்மையாக இருக்கும் என்றுதான் அந்த என்ணத்தில்தான் இது செய்யப்பட்டது. நீங்கள் கூறுகின்ற மாதிரி அப்படி செய்யத்தேவையில்லை அதை செலவில்லாமலே செய்விக்கலாம் என்றால் அடுத்த முறை ஒன்று வரும் போது நிச்சயமாக உங்களின் பங்களிப்போடு அந்த செலவை குறைப்பதற்கு நாம் முயற்சி எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தலைப்பு 3வது சபையின் நிதி நிலமை பற்றியது. அதில் மிகவும் கவனமாக இருந்திருக்க வேண்டும். என்னைப் பொருத்தவரைக்கும் இதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எனது பதிவை இதற்கு நான் எதிர்ப்பு என்றே பதிய வேண்டும் இந்த அமர்வில்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நானும் அந்த விடயம் சம்மந்தமாக கதைக்கலாம் என்று இருக்கின்றேன். உங்களுடைய உரையிலே நீங்கள் கூறி இருந்தீர்கள் சபையின் வருமானம் குறைவாக இருக்கின்றது மிகவும் கவனமாக நிதியை கையாள வேண்டும் என்று, டிரான்ஸ்போமர் வீதியிலே இருக்கின்ற மக்களுக்கு நாங்கள் உரிய சேவை செய்யத்தான் வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை, கருத்து முறண்பாடும் இல்லை. ஆனால் அதைவிட முக்கியமான வேலைகள் இருக்கின்ற போது அந்த விடயத்திற்காக இவ்வளவு பெரிய தொகையை பயன்படுத்தியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நூர்ப்பள்ளி வாசலுக்கு பக்கத்திலே உடைந்திருக்கின்ற மதகுகளை Face Book இலே போட்டு எங்களை சீரழித்து விட்டார்கள்.

அவ்வாறு முக்கியமான பல விடயங்களை நானே இந்த சபையில் குறிப்பிட்டும் அதற்கு பணம் இல்லை என்று நீங்கள் அதனை நிராகரித்து இருக்கின்றீர்கள். 02 வருடமாக நான் எனது வட்டாரத்திலே ஒரு கழிவு நீர் செல்லுகின்ற வாய்க்காலை சீரமைக்க வேண்டும் என்று கடந்த வருடமும் கேட்ட போது அதற்கு காசு இல்லை என்று நீங்கள் கை விரித்து விட்டீர்கள். அப்படி கூடுதலாக மக்களுக்கு பயன்படுகின்ற வேலைகளை நீங்கள் புறந்தள்ளி அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இவ்வளவு பெரிய தொகையை இதற்கு பயன்படுத்தி இருப்பது ஒரு சந்தேகத்தை உங்கள் மீது எங்களுக்கு ஏற்படுத்துகின்றது. இவ்வளவு காலமும் நீங்கள் நன் மதிப்பை பெற்றிருக்கின்றீர்கள். நீங்கள் கட்டிக் காத்து வளர்த்து வந்த நன் மதிப்பை இவ்வாறான செயல்கள் மூலம் உங்களது தரத்தை நீங்களே குறைத்துக் கொள்கின்றீர்கள் என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களது அக்கறைக்கு மிகவும் நன்றி. ஆனால் இதில் நீங்கள் 40,000.00 ரூபாவை 7, 8 இலட்சத்திற்கு ஒப்பிட்டு பேசுகின்றீர்கள். மிகவும் மனவருத்தப்படுகின்றேன். பண தொகைகளை பார்த்து முக்கியமான வேலைகளை அமைச்சு மூலம் சபையின் பணத்தை மிகவும் கவனமாக பிரயோசனப்படுத்த வேண்டும் என்று கூறியதை வைத்து, நீங்கள் இந்த 40,000.00 ரூபாவை அதி கூடிய தொகை என்று சொல்லுவது ஆச்சரியமாக இருக்கின்றது. ஆனால் அன்றய மழை காலத்தில் இது செய்யப்பட்ட காலம் அந்தப் பகுதியில் மிகவும் போக்குவரத்திற்கு கஸ்டமாக இருந்த காலத்தில் இது செய்யப்பட்டது. இதில் என்னைப் பொருத்தமட்டில் இது நியாயமான செலவீனம். அப்படி நீங்கள் எதிர்ப்புகள் தெரிவிக்கும் பட்சத்தில் நாம் வாக்கெடுப்பு மூலம் இதை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த விடயம் 500 பொதுப்பயன்பாட்டுச் சேவை கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களால் முன்வைக்கப்பட்ட அந்த கோரிக்கை. டிரான்ஸ்போமர் 02ம் குறுக்கு வீதி என்று சொல்லப்படுகின்ற வீதி சென்னல் கிராமம் 02ம் பிரிவிலே இருக்கின்றது. இந்த வீதியில் ஏறத்தாள வீதியினுடைய இரு மருங்குகளுக்கு இடையில் கட்டட இடிபாடுகள் கொட்டப்பட்ட இடங்களுக்கிடையில் ஏறத்தாள 1 மீற்றர் வித்தியாசமான பள்ளத்தாக்கு. அடை மழை பெய்கின்ற காலத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏனைய அப் பாதையினை பயன்படுத்துகின்ற எல்லோருக்கும் அதனால் போவதற்குரிய சந்தர்ப்ப சூழ்நிலை இருந்ததன் காரணமாக எமது சபைக்கு நான் தான் அம் முன்மொழிவை முன்வைத்திருந்தேன். ஆனால் இது என்னுடைய தனிப்பட்ட ஒன்றாக கருதாமல் அம் மக்களினுடைய தேவையாக வேண்டியே அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டது. கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் சொல்லுகின்ற போது கட்டிட இடிபாட்டுப் பொருட்களை கொட்டுவதற்கு இன்று இடம் இல்லாமல் இருக்கின்றது என்று சொன்னால் அதே போன்று 13 பாதைகள் நான் தருகின்றேன். உங்களால் முடியுமாக இருந்தால்

நீங்கள் சபையினுடைய நிதி இல்லாமல் அந்த இடத்தில் கொட்ட முடியுமாக இருந்தால் கொட்டித் தாருங்கள். அதற்கு உங்களுக்கு நன்மை கிடைக்கும். அவ்வாறு அந்த மக்கள் கஸ்டப்படுகின்றார்கள். ஏனென்றால் சென்னல் கிராமம் 02ம் பிரிவிலே இருக்கின்ற பாதைகளை சீர்திருத்த வேண்டுமாக இருந்தால் ஏறத்தாள இந்த நாட்டின் அரசாங்கத்தின் ஒரு வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக செலவீடு செய்ய வேண்டும். அப்போதுதான் அக் கிராமத்தை நிவர்த்தி செய்யலாம். யாரும் சபை நிதியை நீங்கள் சொல்லுகின்றவாறு மோசமான முறையில் செலவீடு செய்யவில்லை. என்னுடைய தனிப்பட்ட பங்களிப்பையும் சேர்த்துதான் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த இடத்திலே 57 பெட்டி கல் கொட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் நான் என்னுடைய செலவில் 17 பெட்டிகளை பொறுப்பேற்றுக் கொண்டு 40 பெட்டிகளுக்குதான் சபை நிதி மூலம் பணம் கொடுக்கப்பட்டது அவர்களுக்கு, அதுவும் என்னுடைய வேண்டுகோளுக்காக அல்ல. சபையினுடைய பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தர் றசாக் அவர்களின் தலைமையில்தான் அந்த வேலை நடைபெற்றது. மேற்பார்வையாளர் இஜாஸ் அவர்கள் அதனை பார்வையிட்டார். இவர்கள் எல்லோரும் பார்க்கத்தக்கதாகத்தான் அந்த வேலை நடைபெற்றது.

கட்டடத்தை உடைப்பதற்கான பொறுப்பை அந்த கட்டடத்திற்குரியவர் அந்த செலவீனத்தை பாரம் எடுத்தார். அதனை ஏற்றிக் கொண்டு அந்த இடத்தில் கொட்டுவதற்கான செலவீனம் மாத்திரம் தான் சபை ஊடாக வழங்கப்பட்டது. இன்று அம் மக்கள் நிம்மதியாக அப் பாதையிலே சென்று கொண்டிருக்கின்றார்கள். அந்த பாதை இருந்த நிலமை அப் பாதையிலே போக்குவரத்து செய்ய முடியாமல் ஒரு தாயினுடைய கரு கலைந்திருக்கின்றது. அந்த தாயினுடைய அலறல் கேட்க முடியாமல் தான் இந்த சபை இந்த முடிவை எடுத்தது. இதெல்லாம் வெளியில் இருந்து பார்ப்பதற்கு உங்களுக்கு விளங்காது. அவ் வட்டாரத்திலே இருந்து கொண்டு நேரடியாக அந்தப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவன் நான். இந்த சபையினுடைய 40,000.00 ரூபா பணத்தை மோசடி செய்வதற்காக இந்த சபைக்கு நான் வரவும் இல்லை. அதற்காக தவிசாளரிடம் அப் பணத்தை கேட்கவும் இல்லை. என்ன செலவு செய்யப்பட்டிருக்கின்றது அவ்வாறு மோசடி செய்வதற்கு? சம்மாந்துறை முதலாம் குறிச்சிலே இருந்து சென்னல்கிராமத்திற்கு கொண்டு செல்வதற்கு ஒரு வாகனத்தினுடைய ஹயர் கூலி எவ்வளவு வரும்?

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் கட்டாயம் தேவையான ஒரு இடத்திற்கு செலவு செய்வது என்பது அதை நாங்கள் பெரிதாக எடுக்காவிட்டாலும் ஆனால் சொல்லப்படுகின்ற வீதியை நானும் சென்று பார்த்தேன். இதற்கு முதல் இதை விட பயங்கரமான கபூரியா வீதிக்கு சபை வாகனத்தை எடுத்துக் கொண்டு போட்டேன். மற்றது புளியடி வீதியும் மோசமாக இருந்தது. இரண்டு வீதிகளும் சென்னல் கிராமத்திற்கு உட்பட்ட வீதிகள்தான். ஒரு அமைப்பில் செய்தோம். அதே நேரம் வேலைகள் செய்கின்ற போது ஏற்பட்ட செலவீனத்தினால்தான் இனிமேல் நாம் வீடு உடைப்பதில்லை நமது வாகனத்தை கொண்டு செய்வோம் என்று சொல்லி செய்தோம். எந்த செலவீனமும் இல்லாமல்தான் செய்தோம். ஆனால் 40,000.00 ரூபா என்று சொல்லும் போது வெறும் கல்லுதானே கொட்டின என்று, அவரின் ஆதங்கம் விளங்குகின்றது. நானும் அப் பிரதேசத்தில் உள்வாங்கப்பட்டவன் என்ற ரீதியில் அதை கட்டாயமாக செய்ய வேண்டிய வேலையாக இருந்தாலும் எமது வாகனங்களையும் பயன்படுத்தி அந்த செலவை குறைத்திருக்கலாம் என்பதுதான் எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்களது கருத்துகள் உள்வாங்கப்பட்டது. உண்மையாக அந்தக் காலத்தில் செய்யக்கூடியதாக இருந்திருந்தால் அதை வாகனங்கள் மூலம் செய்திருக்கலாம். ஆனால் செய்ய முடியாத நிலையில் தான் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பார்த்து சிபார்சு செய்த பின்தான் நான் அதற்குரிய உத்தரவை வழங்கினேன். ஏனென்றால் அது நியாயமாகப் பட்டது. நாம் சபையால் இவ்வளவுக்கும் கல் போட்டு செய்வது என்றால் கல் வாங்கி போடுகின்ற அளவுக்கு இருந்திருக்கும். உங்களது கருத்துக்களின் படி அது செலவில்லாமல் செய்யலாம் என்ற ஒரு கருத்து இருப்பதனால் எதிர்காலங்களில் முயற்சி எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் சொல்ல வந்த விடயம் என்னவென்றால் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. Cheap ஆக செய்யலாம். சபைக்கு தேவையாக இருந்தால் அறித்தல் கொடுங்கள். இந்த 13 வீதிகளுக்கும் என்னால் போட்டுக் கொடுக்க முடியாது. என்னிடம் வருவதை உங்களிடம் அறிவித்து அதன் மூலம் போட்டுத்தரலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கபூரியா வீதிக்கும் புளியடி வீதிக்கும் கட்டிட உடைபாடுகள் கொட்டுவதற்காக சபையினுடைய JCB இயந்திரத்தினையும் பயன்படுத்தி சபையினுடைய வாகனங்களையும் பயன்படுத்திதான் கொட்டியது. ஆனால் இந்த 2 வாகனத்தினுடைய செலவையும் கணக்கிட்டு பாருங்கள். அதே நேரம் கபூரியா வீதிக்கு கட்டட உடைபாடுகள் போடுவதற்காக ஹிஜ்ரா சந்தியில் இருந்த அந்த வீட்டை உடைப்பதற்கு JCB இனை கொண்டு செல்லும் போது அந்த Glass உடைந்தது. அந்த Glass பொருத்துவதற்கு எவ்வளவு செலவாகியது. இவை எல்லாம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கருத்திற் கொண்டுதான் அந்த நேரம் அடை மழையும் பெய்ததனால் சபை வாகனத்தை எடுக்க இயலாது என்றுதான் வெளியில் வாகனத்தை எடுத்து அதுவும் சபையின் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக வாகனங்களை Call பண்ணித்தான் அவ் வாகனங்களை எடுத்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை ஒரு விவாதாமக எடுக்காமல் கருத்து ஒன்று கூறப்பட்டுள்ளது. அக் கருத்தை உள்வாங்கி இனிமேல் வரும் காலங்களில் கௌரவ உறுப்பினர்களின் உதவியை நாடுவோம்.

**தீர்மானம் - 04/37/01**
சென்ற மாதம் 2021.02.01 தொடக்கம் 2021.02.28 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

செலவீனத்தை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக 02 வாக்குகளும், சார்பாக 09 வாக்குகளும் அளிக்கப்பட்டது. இதனால் இப் பிரேரணை சபையில் அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொது மக்களால் அமைக்கப்படுகின்ற சூரிய சக்தி மின் பிறப்பாக்கி (Solar Power System) இணைப்புக்கள் வீதிகள் மற்றும் அயல் வளவுகள் என்பவற்றினை ஊடறுத்து செய்யப்படுகின்றது. இதனால் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் இது ஒரு வியாபார நோக்குடன் மேற்கொள்ளப்படுவதால் வியாபார பதிவுக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக உங்கள் கருத்துகள். ஏனென்றால் இதை CEB அனுமதியுடன் அந்த நபர்களினால் செய்யப்படுகின்றது. இதற்கு சபையின் அனுமதியோ, தொழில்நுட்ப அங்கீகாரமோ இல்லை. இதனால் கட்டடத்தின் ஒரு அம்சமாக வருகின்றது. சில இடங்களில் பார்த்தீர்களானால் பாதை ஓரமாக 2, 3 கட்டடங்களில் பாரிய அளவில் அந்த Panels பொருத்தப்பட்டிருக்கின்றது. சில வேளைகளில் பாரிய காற்று ஒன்று வீசுமானால் அந்த கட்டுமானம் தாங்குமா? என்ற ஒரு கேள்வி மக்கள் மத்தியில் இருக்கின்றது. இதை நாம் எந்த வழியில் ஒரு கட்டுப்பாட்டை கொண்டுவரலாம். நிறுத்துவதற்கு அல்ல. Approval Process ஒன்று. சில இடங்களில் Panel போடுவதற்குரிய Structure இனை யார் Approve பண்ணுவது? அதில் அனுபவம் இருக்குமானால் கூறலாம். ஏனென்றால் வீடு கட்டுவதற்கு ஒரு Structural Engineer இன் Approval வேண்டும். ஆனால் இதற்கு ஒருவரினதும் Approval இல்லை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு முதலாவது ஒரு வீட்டில் இருப்பவர்கள் Panel போடுவது என்றால் 03 Phase line இற்கு மாற்ற வேண்டும். 03 Phase line இற்கு மாற்றுவது என்றால் CEB அனுமதி வேண்டும். CEB அனுமதி எடுத்த பின்னர் இவர்கள் CEB இல் ஒரு ஒப்பந்தம் செய்ய வேண்டும். Agreement sign பண்ணினால்தான் இவர்களுக்கு கொடுக்கப்படும். அடுத்து இவர்களது கட்டண வீதம் மாறும். நாம் இப்போது Transformer போடுகின்ற மாதிரி இவர்களுக்கும் ஒரு செலவு வரும். அரசாங்கம் இருக்கின்ற நிலமைக்கு சில வேளை ஒரு Rate இற்கு எடுக்கிறது. சிலவேளை Rate இனை குறைத்து சில காலத்தில் கைவிடப்படுகின்றது. 20 வருடம்தான் அதன் Agreement அதுவும் மார்ச் இற்கு பின்னர் 15 வருடத்திற்கு மாற்றுவதற்கு ஒரு உத்தேச திட்டம் இருக்கின்றது. இதே மாதிரி இந்த Channel போடுவதற்கு பாடசாலையில் இலவசமாக அரசாங்கம் 15 பாடசாலைக்கு போடுங்கள் என்று சொல்லி என்னிடம் தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் வந்த நேரம் நாம் பாடசாலையில் இடத்தை எடுத்துக் கொடுத்து இதே மாதிரி பாடசாலையில் பாவிக்கலாம் மீதிக் காசை அவர்கள் உழைத்துக்கு போனால் பாடசாலைக்கு என்ன என்று ஒரு கேள்வி வரும் தானே. பின்னுக்கு பிரச்சினை உருவாகும். அதனால் Agreement அடிப்படையில் இதை செய்யலாம் என்று சொல்லி அவர்களிடம் அந்த விடயத்தையும் நேரடியாக கதைத்தோம்.

குறிப்பிட்ட Transformer இற்கு குறிப்பிட்ட அளவுதான் அனுமதி கொடுப்பார்கள். ஒரு Transformer இருக்கின்ற பிரதேசத்திற்கு 05 அல்லது 02 தான் கொடுக்கலாம். தற்போது எமது ஊரில் எல்லோரும் இலாபம் என்று செய்து கொண்டிருக்கின்றார்கள். திடீர் என்று அதன் மாற்றுநிலை வருகின்ற போது என்ன செய்வார்கள் என்ற மாற்றுவழி இல்லை. இது சம்மந்தமாக ஆய்வு செய்திருக்கின்றேன். மற்றது அரசாங்கமும் இதை ஊக்குவிப்பாக Agriculture கூட 8% Interest போடுகின்றார்கள். இதற்கு மட்டும் 4% கொடுக்கின்றார்கள். அரசாங்கம் இவர்களிடம் வாங்குகின்ற விலையும் Current கொடுப்பதிலும் அரசாங்கத்திற்கு எமக்கு தருகின்ற Unit 9.00 ரூபா, 10.00 ரூபா நூற்றுக்கு மேல் போனால் 36.00 ரூபா வருகின்றது. அந்த வகையில் அரசாங்கத்திற்கு மற்ற உற்பத்திகளுக்கு செலவு கூட வருகின்றதை நாடி ஒரு ஊக்குவிப்போடு நடந்து கொண்டிருக்கின்றது. இதில் நாங்கள் ஒரு குறிப்பிட்ட வரி அறவீடு செய்யலாம். அது வேறு விடயம். நாம் யோசித்து செய்ய வேண்டிய விடயம்.

51 கிராம சேவகர் பிரிவு இருக்கின்றது. நான் அடிக்கடி கூறி வருகின்ற விடயம் நமக்குரிய அமைப்பு ரீதியாக Valuation செய்து பணம் அறவீடு செய்யப்போனோமானால் எங்களது சபையை ஒரு கட்டுப்பாட்டில் நல்ல சபையாக மாற்றி செயற்பட வேண்டும். இந்த காசு அறவீடு செய்வதிலும் எமது ஊரில் ஒரு நடைமுறை இருக்கின்றது என்னவென்றால் எல்லோரும் ஒரு வீட்டைக் கட்டினால் பக்கித்தில் ஒரு Shutter வைத்திருப்பார்கள். கடை மாதிரி ஒன்று ஆனால் அது கடை வியாபாரம் இல்லை. எல்லோரும் வயலோடு சம்மந்தப்பட்டவர்கள். அந்த நெல்லை இலகுவாக வைப்பதற்கு ஒரு Shutter வைத்திருக்கின்றார்கள். அதற்கு நாம் கடை வரி அறவீடு செய்ய இயலாது. கடைக்கு பதிவு செய்யப்பட்டு அப்படி திறப்பது என்றால் அப்படியான ஒரு நிலமையில் தான் பதிவு செய்யப்பட்டது என்று அறவிடலாம். 03 Shutter போட்டு ஒன்றை போற வழிக்கு வைத்திருக்கின்றார்கள். அதற்கும் கடையாக போட்டவுடன் பொதுமக்களுக்கும் நமக்கும் இடையில் ஒரு வித்தியாசமான ஒரு உணர்வு ஏற்படும் சிலர் சொல்லுகின்றார்கள் கடை வைத்திருந்தால் கட்டாயம் நாங்கள் உங்களுக்கு வரி அறவிடுவதில் இசைவாக்கமாக இருக்க வேண்டும். ஆனால் நாங்கள் போகின்ற வழிக்கும் கடை மாதிரி வைத்திருந்தால் எப்படி அறவிடுவீர்கள் என்று கேட்கின்றார்கள்.

இந்த விடயத்தில் நாம் வரி அறவிட்டு வருமானத்தை கூட்டுவதில் உண்ணிப்பாக இருக்கின்றோம். அதே நேரம் நான் கடைசியாக சென்ற கூட்டத்தில் முன்மொழிந்த விடயம் Bicycle Parking செய்தால் அதில் வருமானம் எடுக்கலாம் என்று, நான் நேற்று கூட போய் பார்த்தேன் குறைந்தது 50 இற்கு மேற்பட்ட Bicycle இருக்கும். Auto, Car இனை தவிர. அவர்கள் மண் கொட்ட

வேண்டுமானால் எமது வளவு இருக்கின்றது அதற்குள் கொட்டலாம். அதற்கு ஒரு வருமானத்தை ஈட்டிக் கேட்கலாம். ஏதோ ஒரு வகையில் வருமானத்தை பெறக்கூடியதை பார்க்க வேண்டும். ஆனால் அதற்காக நமக்கு வருமானம் தருவது யார் என்பதையும் யோசித்து பொதுமக்களின் பக்கமும் நாம் நின்று வருமானத்தையும் உழைக்க வேண்டும். எம்மையும் பாதுகாக்க வேண்டும் என்றுதான் எல்லா விடயத்திலும் முடிவு எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Solar Panel விடயத்தில் 02 விடயங்கள் இருக்கின்றது. Electricity Board Procedure ஏனென்றால் Single Phase என்றால் இவ்வளவுதான் செய்யலாம். 03 Phase ஆக மாற்றினால் 40V வரை போகலாம் என்பது அவர்களின் கருத்து. நமக்குள் எழுகின்ற கேள்வி என்னவென்றால் இந்த கட்டுமான வேலையை உறுதிப்படுத்துபவர் யார்? அது சபையின் பொறுப்பாக வருமா? அந்த கட்டுமான வேலைகளினால் இன்னொருவருக்கு பாதிப்பு ஏற்பட்டால் இதை பாக்கவில்லை, கேட்கவில்லை. நமது அதிகாரத்தை பாவிக்கவில்லை என்று கேள்வி வருமா? வரி ஒரு புறம் இருக்க, வீடு ஒன்று கட்டுகின்ற போது ஒரு Plan இற்கு Structural Engineer ஒப்பம் இட வேண்டும் அது சரியான முறையில் பாவிக்கப்பட்டுள்ளதா என்று, இதில் யார் இந்த கட்டுமான வேலையை உறுதிப்படுத்துபவர்?

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக கொஞ்சம் விளக்கம் தரலாம் என்று நினைக்கின்றேன். Solar Power பூட்டுவதற்கு முதற்கட்டமாக சுற்றாடல் சூழல் பகுதி கண்காணிப்பாளரின் அனுமதியோடு இதற்கு உண்மையாகவே பிரதேச சபையின் அனுமதி பெற்றிருக்க வேண்டுமாம். நானும் இதை பூட்ட இருப்பதால் விசாரித்தேன். உலக மத்திய வங்கி அனுசரணையோடுதான் Solar Power நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 60 இலட்சம் ரூபா என்று சொல்லி முன் செலுத்தி அதற்கு 20 இலட்சம் முன் செலுத்திவிட்டு 40 இலட்சத்தை கடனாக வங்கி கொடுக்கின்றது 4% வட்டியோடு. 60 இலட்சம் தொகையாக அவர் பூட்டினால் 60,000.00 ரூபா அவருக்கு மாதம் வருமானம் அந்த Company இனால் கொடுக்கப்படுகின்றது. இதன் உண்மையான Increment 20 வருடம். நான் இதைப்பற்றி விசாரித்தேன் நானும் இதை செய்யலாம் என்று, மற்றது இதன் பின்னணி என்ன என்று கேட்டால் நாளடைவில் சூழல் மாசடைவதற்கு வழி வகுக்கும் என்பதையும் இதில் இருந்து ஒருவர் சொன்னார்.

ஏனென்றால் காபன் அணுக்கதிர் வந்து அணு வளிமண்டலத்தில் ஓட்டை விழுந்திருப்பதால் அணுக் கதிர்களின் தாக்கங்கள் வந்து இதற்கு எதிர்மாறாக செயற்படும் என்ற விளக்கத்தையும் நான் கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக நான் எமது சூழல் சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தராக இருக்கின்ற இஸ்ஹாக் அவர்களிடம் தொடர்பு கொண்ட போது அவர் சொன்னார் நாங்களும் துரித விசாரணை செய்து கொண்டிருக்கின்றோம் என்றார். என்னைப் பொருத்தவரை இதற்கு எந்தவிதமான அடிப்படை தகமைகள் பிரதேச செயலகத்திலோ, பிரதேச சபையிலையோ எடுக்காமல் தான் நிறுவி வருகின்றார்கள். ஆனால் இது கட்டாயம் பிரதேச சபையில் அனுமதி எடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு குறிக்கோளை நான் அந்த இடத்தில் பெற்றுக் கொண்டேன். ஆகவே நாம் இந்த வருமானத்தை உடனே ஆராய்ந்து, ஆராய்வது என்றால் சுற்றாடல் சூழல் பகுதியில் இருக்கின்ற இஸ்ஹாக் அவர்களிடம் ஆராய்ந்தால் முழு விளக்கமும் தருவார். அவருடன் தொடர்பு கொண்டு இதற்கான இடத்தை கொடுக்க வேண்டும் என்றால் அதற்கான வரியையும் அறவிடலாம் என்பதற்கு அதில் எத்தனையோ வீதம் இருக்கின்றது பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு. இதை எல்லாம் செய்யாமல்தான் தற்துணிவோடு செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் கேள்விப்பட்டேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியானால் நாம் மின்சார சபைக்கும், சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் எழுதி இதற்குரிய விதிமுறையை Procedure ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தீர்மானம் எடுப்போம். ஏனென்றால் வரி அடுத்த கட்டத்திற்கு போகலாம். முதல் இதன் Approval

ஏனென்றால் சில இடங்களில் வீதியால் செல்லும் போது பயம் வரும் அந்தளவுக்கு பரப்பு போடப்பட்டு இருக்கின்றது. எனக்கு இருக்கின்ற பயம் அதுதான். அதை உறுதிப்படுத்துபவர் யார்? கட்டுமான வேலைகளை உறுதிப்படுத்துவதற்கு ஒரு Procedure ஐ உருவாக்குவதற்காக தீர்மானம் எடுப்போம்.

### தீர்மானம் - 04/37/02

பொது மக்களால் அமைக்கப்படுகின்ற சூரிய சக்தி மின் பிறப்பாக்கி (Solar Power System) தொடர்பாக மின்சார சபையிடமும், சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடமும் கலந்தாலோசித்து இதற்குரிய விதிமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பழைய அலுவலகத்தினை நாம் சென்ற சபையில் நில அளவைத் திணைக்களத்திற்கு கொடுப்பதாக முடிவு எடுத்தோம். அதற்கு சில திருத்தங்கள் செய்து கொடுப்பதற்கும், பழைய அலுவலகத்தில் அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்திற்கு மின் இணைப்பு, நீரிணைப்பு மலசலகூடம் அமைத்தல். ஏனென்றால் தற்போது இருப்பவற்றை நில அளவைத் திணைக்களத்திற்கு கொடுத்துவிட்டு நமக்கு 03 Phase எடுப்பதற்கான தீர்மானம்.

### தீர்மானம் - 04/37/03

பழைய அலுவலகத்தினை நில அளவைத் திணைக்களத்திற்கு வாடகைக்கு வழங்குவதால் அதனை சிறு திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/37/04

பழைய அலுவலகத்தில் அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்திற்கு 03 Phase மின் இணைப்பு, நீரிணைப்பு, மலசலகூடம் என்பன அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/37/05

பழைய அலுவலகத்தில் கடமைக்காகச் சமூகமளிக்கும் ஊழியர்களுக்காக விரல் அடையாள இயந்திரம் (Finger Print Machine) கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது கௌரவ முன்னாள் பிரதித் தவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்களின் முயற்சியில் மல்வத்தையில் 24 தெருலாம்புகள் பூட்டப்பட்டு இருக்கின்றது. அதை 03 மாதங்களுக்கு RDA பராமரிக்கும் பின் சபையின் பராமரிப்பின் கீழ் வரும் அதற்குரிய மின் கட்டணத்தினை செலுத்துவதற்கான தீர்மானம்.

## தீர்மானம் - 04/37/06
மல்வத்தையில் தற்போது RDA இனால் அமைக்கப்படும் 24 Street Lamp இற்கான மின் இணைப்பு மற்றும் 03 மாதத்திற்கான மின் கட்டணம் என்பவற்றை RDA இனால் செலுத்தப்படும். இதனைத் தொடர்ந்து வரும் மாதங்களுக்கான மின் கட்டணத்தினை சபை நிதி மூலம் செலுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உழவு இயந்திரங்களின் தேய்வடைந்த டயர்களை Re Build செய்தல். இது Re Current Expenditure. டயர்களை Re Build செய்வதற்காக. சில நேரம் கேட்கலாம் Re Build செய்து சரி வருமா என்று, நாம் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் ஒரு மாற்றம் கொண்டு வந்தோம். அதாவது Tractor எல்லாம் ஆளங்குளத்திற்கு செல்வதில்லை. Tractor எல்லாம் தற்போது எமது Compost Yard இற்கு சென்று Unload செய்வது. இறக்காமத்தில் இருந்து Drum Track எடுத்ததனால் அது இரண்டும் தான் ஆளங்குளத்திற்கு செல்கின்றது. அதை JCB இனால் Full Load செய்து 05 Tractor போவதை நிற்பாட்டி இருக்கின்றோம். ஏனென்றால் Tractor எல்லாம் 10, 15 வருடங்களுக்கு மேலானது. அதனால் Re Build டயர் போடுவதால் பிரச்சினை வராது ஊருக்குள் ஓடுவதனால்.

## தீர்மானம் - 04/37/07
உழவு இயந்திரங்களின் தேய்வடைந்த டயர்களை Re Build செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/37/08
மல்வத்தையில் 09ம் இலக்க கடை மற்றும் அம்பாரை வீதியில் அமைந்துள்ள கடையறைகளையும் புணர் நிர்மானம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
EPF , ETF தற்போது நாம் Form நிரப்பி Bank இற்கு காசு கட்டுகின்றோம். அதை e – System இற்கு மாற்றி செய்வதற்கு சபை தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டும் என்பதனால் அதை ஒரு சபை தீர்மானமாக எடுக்க வேண்டும்.

## தீர்மானம் - 04/37/09

சபையினால் ஊழியர்களின் பெயரில் செலுத்தப்படுகின்ற EPF, ETF கொடுப்பனவுகளை e – Return System மூலம் 2021 ஏப்ரில் மாதத்தில் இருந்து செலுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கூட்டங்கள் எல்லாம் Zoom Technology மூலம் நடாத்தப்படுகின்றது. LDSP திட்டத்தின் கீழ் UNDP சம்மாந்துறை பிரதேச சபைக்குரிய Zoom Equipment தந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களின் சிபார்சு பெரிய Screen உம், Touch Screen TV உம், Sound உம் இருந்தால் ஒரு கூட்டத்தையோ நடத்தலாம் என்று, நான் அவர்களிடம் கேட்டேன் அவர்கள் வந்து பார்த்து சிபார்சு செய்யச் சொல்லி சபையினால் அதை செய்யும் போது சம்பூரணமாக Video Conferencing Facility ஐ உருவாக்கலாம் என்று அதற்குரிய செலவீனத்தை அங்கீகரித்தல்.

## தீர்மானம் - 04/37/10

எமது சபையில் Zoom Technology மூலம் கூட்டங்கள் நடாத்துவதற்காக Video Conferencing Facility இனை உருவாக்குவதற்கும், அதற்கான செலவீனத்தை அங்கீகரிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் கௌரவ உறுப்பினர்கள் கவனமாக கேட்டு இதில் முடிவு எடுக்க வேண்டும். பாதைகள் எல்லாம் காபட் பாதைகளாக மாற்றப்படுகின்றது. கொங்கிறீட் பாதைகளுக்கு மேல் அஸ்போல்ட் அடித்துவிட்டோம். இது அடித்து முடித்த பின் நீர் இணைப்பிற்கு Application வருகின்றது. 02 Inch அஸ்போல்ட் உம் 06 Inch கொங்கிறீட் உம் ஆகும். அது நீர் இணைப்பிற்கு 03 அடி வெட்டப்படும். வெட்டினால் அதை பழைய நிலைக்கு கொண்டு வர இயலாது. ஏனென்றால் முழுதாக கொங்கிறீட் அடிக்க வேண்டும். 06 உம் 02 உம் சேர்ந்து கொங்கிறீட்டாக வர வேண்டும். இல்லாவிட்டால் அவ்விடத்தில் அப் பாதை பழுதடையும். இதற்கு ஒரு Application முந்தநாள் வந்தது. நான் சொன்னேன் இது காபட் நாங்கள் செய்ய இயலாது. அது RDA அவர்களிடம் கேளுங்கள் இப்படி ஒரு துண்டு வெட்டுப்பட்டால் அதை நிவர்த்தி செய்வது எப்படி? எவ்வளவு? அது ஒரு புறம். நிவர்த்தி செய்ய இயலாமல் அதனால் அப் பாதை அழிவடைகின்றது என்றால் நீர் இணைப்பு கொடுக்க இயலாது. அதில் ஒரு அடிப்படை பிரச்சினை வரலாம். நான் வீடு கட்டிவிட்டேன் வீடு கட்டினால் எனக்கு நீர் இணைப்பு தர வேண்டும் என்று, அதில் ஒரு சிக்கல் வருகின்றது என்னவென்றால் 90 வீதமான கட்டடங்கள் அனுமதி இல்லாத கட்டுமானங்கள்.

சபையினால் அனுமதிக்கப்படாத ஒரு கட்டடத்திற்கு சபை எப்படி நீர் இணைப்பிற்கு சிபார்சு செய்வது. 02 பிரச்சினை வருகின்றது. ஒன்று அஸ்போல்ட் கொங்கிறீட் பாதையை மீண்டும் அந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு RDA சொல்லும் அதை செய்யலாம். ஆனால் ஒரு சதுர அடிக்கு இவ்வளவு வேண்டும் என்று சொன்னால் RDA இற்கு பாரம் கொடுத்து செய்யலாம். ஆனால் அனுமதி இல்லாத கட்டடத்திற்கு இவ்வளவு காலமும் அதை செய்து வருகின்றோம். அதை பார்க்கின்றோம் இல்லை. ஆனால் எதிர்காலங்களில் நிச்சயமாக அனுமதி இல்லாத கட்டுமானங்கள் பெரிய ஒரு சர்ச்சையாக வரும். அப்படி வருகின்ற போது இந்த சபை என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்ற ஒரு கேள்வி வரலாம். அதை எப்படி நிவர்த்தி செய்வது. ஏனென்றால் இது இந்த ஊரில் பாரிய பிரச்சினை. பலர் பல காலமாக நான் கூட தவிசாளராக முதல் தடவை வந்து Notice போட்டு அத்தோடு விட்டுவிட்டோம். இந்த முறையும் சொல்லிவிட்டு விட்டுவிட்டோம். ஏனென்றால் 90 வீதமான வீடுகள் அனுமதி இல்லாமல்தான் கட்டப்படுகின்றது. இதன் ஆபத்து ஒரு பக்கம் இருக்க சபை என்ற ரீதியில் நாம் அதை நிற்பாட்டுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கின்றோம்?

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முன்பு அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டடத்தை விட்டுவிட்டு இனிவருகின்ற ஒவ்வொரு வீட்டினுடைய கட்டிடத்தை அனுமதி பெற்றால் மட்டும் தான் நீர் இணைப்பிற்கு அனுமதி கொடுப்பதாக சபையில் முடிவு எடுத்தால் எவ்வாறு இருக்கும்?

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீடு கட்டுவது என்பது உண்மையாக சட்ட முறையாக அற்ற கட்டடங்களை சட்டரீதியாக உடைக்க வேண்டும். இரண்டாவது விடயம் காபட் போடுகின்ற விடயத்தில் எல்லாம் வீதி செய்வதற்கு முன் ஏழைகள் என்றால் நாம் எப்போதும் வசதி குறைந்தவர்கள் பக்கம்தான் பேச வேண்டும். அவர்கள் ஒரு பைப் போட்டால் உரிய இடத்தில் மட்டும்தான் வெட்டலாம். அப்படியான வசதிகள் செய்து கொடுத்தும் திரும்ப இப்படி வருவது என்றால், அஸ்போல்ட் கொண்டு வருவதற்கும், அதனை போடுவதற்கும் எவ்வளவு கஸ்டப்படுகின்றார்கள். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் வந்திருந்தால் இந்த விடயத்தை சொல்லுவோம் என்று இருந்தேன். 9ம் இலக்க கடையை உடைத்ததற்கு நாம் அனுமதி எடுத்தோம்.

அதே நேரம் பழைய மடுவத்தை சென்று பார்த்தேன். அந்த வளவை அபகரிக்கின்ற மாதிரித்தான் போகின்றது. நாங்கள் எல்லோரும் உத்தியோகத்தர்களையும் அழைத்து மேற்பார்வை செய்து Boundary போட்டு அந்த இடத்தை பராமரிக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் முதல் வைத்த கோரிக்கையை ஏதோ ஒரு விளக்கு பத்துகின்ற மாதிரி செய்தால்தான் நமது பெறுமதியான சொத்து, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தவிசாளராக இருந்து உறுப்பினராக இருக்கின்ற காலத்திலே அவருடன் மிகவும் முரண்பட்ட விடயம் Bio gas செய்தது பிழை என்று, அதற்கு மேல் கொப்பர் ஒன்று வைத்தது. அது இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அது மிகவும் பெறுமதிவாய்ந்தது. யாரும் எடுக்க இயலாது. அனுமதியோடுதான் எடுக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து ஒரு சிரமதானம் செய்து அந்த இடத்தை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சேதத்தை ஓரளவு குறைத்துக் கொள்வதற்காக National Water Board இற்கு நாம் ஒரு ஆலோசணை வழங்கலாம். ஒரு தெருவில் எத்தனை குடியாட்டங்கள் இருக்கின்றது என்று அண்ணளவாக எடுத்து இன்னும் எதிர்காலத்தில் நீர் இணைப்பை பெற்றுக்கொள்ளக்கூடியவர்கள் எத்தனைபேர் இருக்கின்றார்கள் என்று பார்த்து அவர்களின் Supply Point இனை சில இடங்களில் வைக்கலாம். தேவையான நேரம் இதில் இருந்து Supply வழங்கலாம். வீதியினை Damage பண்ண தேவையில்லை. இது கொழும்பில் நடக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது ஊரை பொருத்தவரையில் சிக்கல் என்னவென்றால் Water line Lay பண்ணும் போது அதில் சரியான ஒரு Supervision இல்லாமல் ஏறத்தாள 70 வீதமான பாதைகளில் பைப் நடுவால் போகின்றது. உண்மையாக அதான் நான் கொங்கிறீட் றோட் இற்கு எதிர்ப்பு எதிர்ப்பு என்று சொன்னதற்கு காரணம் ஏனென்றால் ஏறத்தாள எல்லா பாதைகளிலும் வெட்டு இருக்கின்றது. அப்படியான ஒரு பைப் system தான் இருக்கின்றது. அதை அந்தக் காலத்தில் பெரிய ஒரு வரப்பிரசாதம் மாதிரி நாங்கள் எடுத்து அதை ஒருவரும் பார்க்கவில்லை. கல்லு போற வீதி என்றால் அதை உடைத்து பெச் பண்றது பெரிய ஒரு விடயமா வருவதில்லை. கொங்கிறீட் வந்தவுடன் கொங்கிறீட்டை வெட்டியவுடன் பழைய நிலைக்கு வருவதில்லை. நீங்கள் சொல்வது சரி நாம் கட்டாயம் அவர்களிடம் அந்த Idea வை கொடுக்கலாம்.

கௌரவ உப தவிசாளர் சொன்னமாதிரி இப் பாதைகள் செய்வதற்கு முதல் பொது அறிவித்தல் செய்து நீங்கள் நீர் இணைப்பு எடுப்பது என்றால் பைப் போட்டு வைங்கள் என்று சொன்னதற்கு பின்னர் கூட, ஏனென்றால் இந்த ஊரில் பிரச்சனை இதுதான் சட்டத்தை மதிப்பதில்லை. அதனால் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் சொன்னமாதிரி அனுமதி எடுக்காத கட்டுமான வேலைகளுக்கு நாம் நீர் இணைப்பு கொடுக்க இயலாது. ஏனென்றால் நீர் இணைப்பு மட்டும்தான் எம்மிடம் வருகின்றது. மின் இணைப்பிற்கு GS Sign பண்ணினாலே போதும். இதை நான் உயர் மட்டத்திலும் திரும்பி எடுப்பதற்கு இருக்கின்றேன். ஏனென்றால் அதனால் கட்டுமான வேலைகளை கட்டுப்படுத்த இயலாமல் இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒருவருக்கு 10 பேச்சஸ் வளவு. அந்த வளவை ஒருவர் 03 பெண் பிள்ளைகளுக்கு கொடுக்கப்போகின்றார். 03 பேச்சஸ் ஆக பிரித்து கொடுப்பதற்கு எப்படி நாம் அனுமதி கொடுப்பது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களுக்கு தெரியும் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் அதற்கு அத்தாட்சி. கொழும்பில் கட்டிட அனுமதி எடுத்து COC எடுக்காம பெயர்மாற்றம் கூட செய்வதில்லை. COC எடுக்க வேண்டும். நமது ஊரில் பிரதேச சபை அனுமதி எடுத்தயா? சரி. Approval என்பது இது மாதிரி கட்டுங்கள் என்று சொல்கின்ற வழிகாட்டல்தான். Approval படி கட்டிவிட்டு COC இற்கு விண்ணப்பிக்க வேண்டும். Plan படி கட்டப்பட்டிருக்கின்றது என்று ஒரு Certificate கொடுத்தால்தான் அந்த வீட்டை வாடகைக்கு கொடுக்கலாமோ அல்லது அந்த வீட்டிற்குள் போகலாம். நீங்கள் கேட்ட கேள்வி 03 ஆக பிரிக்க இயலாது. ஆனால் 03 வீடு கட்டலாம். ஒரே Plan இல் 03 இற்கும் Provide பண்ணி Plan Approval எடுத்துவிட்டு ஒவ்வொன்றாக கட்டலாம். ஆனால் நாட்டின் சட்டம் பிரிக்கக்கூடியது இவ்வளவு தான் என்று இருக்கின்றது. ஆனால் நாம் 04 பேர்ச் இற்கு பரிந்துரை செய்திருக்கின்றோம். சபைக்கு அதிகாரம் இருக்கின்றது. அந்த சூழலுக்கு ஏற்பட்ட கட்டடம் அமையுமானால் அதை அங்கீகரிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கட்டட அனுமதி உண்மையிலே எமது ஊரில் பாரிய சவாலுக்கு உட்படுத்தப்பட்ட விடயம். இதை ஒரே தடவையாக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பாரிய சவால். ஏனென்று சொன்னால் இன்று சாதாரண பாமர மக்கள் வாழுகின்ற பிரதேசத்திலே கட்டடங்கள் கூடுதலாக கட்டப்படுகின்ற ஒரு கால கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம். ஆகவே கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் குறிப்பிட்டது போன்று நாங்கள் ஒரு முடிவை எடுக்கலாம் எதிர்வருகின்ற காலங்களில் கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு உதாரணமாக 2021 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்படுகின்ற கட்டடங்களுக்கு அதற்கான அனுமதியினை பெற வேண்டும் என்பதை நாம் இப்போது இருந்தே மிகவும் காரசாரமான முறையிலே ஊர் மக்களுக்கு அறிவித்தால் ஓரளவு செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இவ்வாறே நாங்கள் ஒரு பாதையினை செப்பனிடுவதற்காக மிகவும் கஸ்டப்பட்டு எங்கு எல்லாம் அலைந்து நிதியை

கொண்டு வந்து செப்பனிடுகின்ற பாதைகள் மிக இலகுவாக அழிக்கப்படுகின்றது. இது சம்மந்தமாக பல தடவைகள் கூறியிருக்கின்றேன் இந்த சபையில். இதில் 02 அம்சங்கள் இருக்கின்றது என்னவென்றால் குடிநீர் இணைப்பினை மக்கள் பெறுகின்ற போது கொங்கிறீட் பாதையாக இருந்தால் அந்த உரிய இடத்திற்கு Box வைத்து Pipe line செய்து தேவைப்படுகின்ற போது எடுக்கலாம். காபட் இடப்படுகின்ற பாதையில் அவ்வாறான Box வைத்து எடுக்க முடியாது. ஏனென்றால் காபட் இனை வெட்டி எடுக்கக்கூடிய சந்தர்ப்பம் இல்லை. அதே நேரம் ஒரு பாதை செப்பனிடப்படுகின்ற போது ஏறத்தாள 90 வீதமானவர்கள் அவர்களுடைய தரிசு நிலம் இருந்தாலும் குடிநீர் இணைப்பை பெற்றுக் கொள்வார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ள வசதி இல்லாத ஒரு சிலரால் மட்டும்தான் அது கைவிடப்படுகின்றது. ஆகவே நாம் அவர்களின் நிலமையை கருத்திற் கொள்ள வேண்டும்.

அதே நேரம் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிலும் ஒரு அங்கம் இருக்கின்றது. அவர்களுக்கு மானிய அடிப்படையில் அல்லது தவணை அடிப்படையில் அந்தப்பணத்தை செலுத்தி நீர் இணைப்பை பெறக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. அவ்வாறானவர்களுக்கு அந்த Main Connection இனை line பண்ணி அவர்களின் இடத்தில் பொருத்திக் கொடுப்பார்கள். Meter மாத்திரம் பொருத்திக் கொடுக்க மாட்டார்கள். பாவிக்க இயலாத ஒரு நிலமை இருக்கின்றது. தேவைப்படுகின்ற நேரம் அந்தப் பணத்தை அவர்கள் செலுத்திய பின்னர் Meter இனை பொருத்திக் கொடுப்பார்கள். அது காபட் வீதியை மக்களால் பழுதடைகின்றது என்பது நூற்றுக்கு பத்து வீதம் தான். ஆனால் இதை விட பாரதூரமான விளைவு நீர் வழங்கல் சபையினால் எமக்கு இருக்கின்றது. நீர்க் குழாய்கள் வெடிக்கின்ற போது அந்த திருத்த வேலைகளை செய்கின்ற போது எந்தவிதமான முன் அனுமதியும் இல்லாமல் தாங்கள் நினைத்தவாரே அதனை வெட்டி அவ்வாறு வெட்டப்பட்ட இடங்களில் தான் எமது ஊரில் பாதைகள் கூடுதலாக பழுதடைந்து இருக்கின்ற இடங்கள் நீர்க் குழாய்களை திருத்தம் செய்வதற்காக வெட்டப்பட்ட இடங்கள் தான். ஆகவே இதற்கு நாங்கள் சாதாரண ஒரு பொதுமகன் குடிநீர் இணைப்பை பெற வேண்டும் என்பதற்காக எத்தனையோ திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். ஆனால் இதனை இவர்கள் இவர்களால் சேதம் அடைகின்ற பாதையை மீண்டும் செப்பனிடுவதற்கான வழிமுறைகளை நாம் கையாள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதற்கு ஒரு Scheme இருக்கின்றது தானே Water Board இல். நாம் உத்தியோகபூர்வமாக எழுத வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீரிணைப்பை பெறுவதற்காக பாதையில் அகழி வெட்டுவதற்கான அனுமதி நாம் இங்கு இருந்த இடத்தில் இருந்து கையொப்பமிட்டு கொடுக்கின்றோம். ஆனால் உண்மையாக அந்த இடத்தை சென்று வெட்டுவதற்கு மீண்டும் செப்பனிடுவதற்கு இதன் செலவு எவ்வளவு வரும் என்பதை ஒரு Advance ஆவது பெற்றுக் கொள்ள வேண்டும். அடுத்த விடயம் இந்த ஊரில் எத்தனையோ பாதைகள் செப்பனிட வேண்டி இருந்த போதும் கொங்கிறீட் வீதிக்கு மேல் காபட் அடித்தது. அடிக்கப்பட்ட காபட் இனால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஒவ்வொரு கொங்கிறீட் Joint இலும் காபட் உடைந்து விட்டது. கொங்கிறீட் 5 மீற்றர் நீளத்திற்கு ஒரு Joint வைத்துதான் போடுவது. அந்த Joint முழுவதையும் Lay பண்ணி காபட் முழுவதும் உடைந்துள்ளது. அவ்விடத்தால் பாரமான வாகனம் செல்லும் போது காபட் உடைந்து வருகின்றது. நாளடைவில் இருந்த கொங்கிறீட் வீதியினை விட மோசமாக lay பண்ணின காபட் வரும் அவ்விடத்தில். ஆகவே அவ்வாறான வேலைகள் செய்கின்ற போது சபை அதை கவனமாக கவனிக்க வேண்டும். நடந்தது முடிய இருக்கின்ற காலத்தில் அவ்வாறான ஒரு வேலையை செய்தோமானால் அதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பாதைகளில் வெட்டி நீர் இணைப்பு கொடுப்பது தொடர்பாக எமது ஊரில் அவரவர்கள் வெட்டுகின்றார்கள். அவர்கள் விரும்பிய மாதிரி வெட்டுகின்றார்கள்.

ஆனால் மட்டக்களப்பில் அவ்வாறு இல்லை. ஒரு குழு இருக்கின்றது Water Board இல் இருக்கும். Un official ஆக இருக்கும். நாங்கள் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பத்தில் எங்களது தொலைபேசி இலக்கம் இருக்கும். அவர்கள் தொடர்பு கொண்டு எப்ப வெட்டி தரவேண்டும் என்று கேட்பார்கள். அவர்களிடம் ஆயுதங்கள், பயிற்சி எல்லாம் இருக்கின்றது. அவர்கள் வீதியின் 02 பக்கத்திலும் வெட்டிவிட்டு ஆயுதங்களைப் பாவித்து கீழால் துளைவிட்டு இணைப்பினை கொடுக்கின்றார்கள். மட்டக்களப்பு, நிந்தவூரில் எந்த cross வெட்டும் இருக்காது. வீரமுனையில் கோயில்களில் ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள் இந்த வீதியினை செய்யப் போகின்றோம் Connection எடுப்பவர்கள் எடுங்கள் என்று சொல்ல எடுத்தார்கள். நானும் இதை பயன்படுத்தி எடுத்தேன். என்னுடைய வீட்டிற்கு வருகின்ற Connection இல் எந்த தடமும் இல்லை. வீதியினை வெட்டவும் இல்லை. மற்றவர்கள் வெட்டி இருக்கின்றார்கள். அதே முறையை 02 அல்லது 03 பேரை மட்டக்களப்பில் பயிற்சி எடுத்தால் அவர்கள் மற்றவர்களுக்கு பயிற்சி கொடுப்பார்கள். ஆனால் Un Official ஆக நடக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Office இனால் சபைக்குள்ளே செய்யலாம் தானே. அதை செய்வோம்.

**தீர்மானம் - 04/37/11**

2021 ஆம் ஆண்டில் இருந்து பிரதேச சபையின் அனுமதியுடன் கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு மாத்திரம் நீர் இணைப்பு பெறுவதற்குரிய அனுமதியினை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, என்னால் பிரேரிக்கப்பட்ட பிரேரணை விவாகரத்து (Divorce), சிறுவர்கள் சம்பந்தமான பிணக்குகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது சம்பந்தமான பிரேரணை. நான் இந்த பிரேரணையை வழங்கிவிட்டு முதலில் பிரதேச செயலகத்திற்கு சென்று Counselling Unit இற்கு சென்று உங்களுக்கு எவ்வாறான பிரச்சினைகள் வருகின்றது? எந்த அடிப்படையில் வருகின்றது? அந்தப் பிரச்சினைகளை யார் உங்களுக்கு கொண்டு வருகின்றார் என்று கேட்ட போது அவர்கள் சொன்னார்கள் என்னிடம் பொலிஸ் நிலையத்தில் இருந்து அந்தப் பிரச்சினைகள் வருகின்றது. சிறுவர்களின் பிரச்சினையாக இருந்தாலும் சரி, பெண்களின் பிரச்சினையாக இருந்தாலும் சரி பொலிஸ் நிலையத்தில் இருந்து வருகின்றது அல்லது MOH இல் இருந்து அப் பிரச்சினைகள் வருகின்றது. ஆனால் அவர்களுக்கு குவாசி நீதிமன்றத்தில் இருந்து அப் பிரச்சினைகள் வருவதில்லை. இங்கு பெற்றார்கள் அவர்களுடைய கடமைகளை முடித்து விட வேண்டும் என்று பிள்ளைகள் பருவம் எய்வதற்கு முன்பு 17, 18 வயதுகளில் திருமணம் முடித்து கொடுப்பது. அப் பிள்ளைகளுக்கு வெளிநாட்டில் இருந்து வருகின்ற மணமகனை தேடி திருமணம் முடிப்பது. அந்த திருமணம் 03 மாதங்கள் தான் அவர்கள் நாட்டில் இருப்பார்கள். மீண்டும் வெளிநாட்டுக்கு செல்வதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

அடுத்த விடயம் சொத்துக்கள் சம்மந்தமாக சொத்துக்களை தருவோம் என்று வாக்களித்துவிட்டு அந்த சொத்துக்களை கொடுக்காமல் இருப்பதனால் அந்த திருமணத்தில் பிரச்சினைகள் வருகின்றது. பிரச்சினைகள் பல விதம் ஆனால் இந்தப் பிரச்சினைகளை அந்த மக்களுக்கு அதாவது எமது சம்மாந்துறையை குறிப்பாக எடுத்துக் கொண்டால் மக்களுக்கு தெரியாது பிரதேச செயலகத்தில் Counselling Unit இருக்கின்றது என்று, அந்த Counselling Unit இற்கு சென்று Counselling Unit இல் இருக்கின்றவர்கள் சிறுவர் மேம்பாட்டு உதவியாளர், சிறுவர்

பாதுகாப்பு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் இவர்கள் நான்கு பேரும் சேர்ந்துதான் Counselling செய்கிறார்கள். 04 பேருக்கும் ஒவ்வொரு வகையான திறமைகள் இருக்கும். அந்தப் பிரச்சினைகளை அவர்கள் கற்று வந்திருப்பார்கள். இந்தப் பிரச்சினைகளை தாங்கள் எவ்வாறு தீர்க்கலாம். இப் பிரச்சினைகளில் எந்த அணுகுமுறையை கையாண்டால் இவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படும். இவ்வாறான பல கருத்துகள் இருக்கின்றது. ஆனால் எங்களுடைய இந்த ஊரினுடைய மக்கள் என்ன செய்வது என்றால் கணவன், மனைவிக்கிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனடியாக குவாசி நீதிமன்றத்திற்கு போகின்றார்கள். குவாசி நீதிமன்றத்திற்கு சென்றால் குவாசி நீதவான் உடனடியாக விளக்கத்தை எடுத்து அவ் இடத்தில் திருமணங்கள் முறிவடைகின்றது. நான் அவர்களிடம் விசாரித்த போது அதாவது Counselling Unit இல் வேலை செய்தவர்களிடம் விசாரித்த போது, உங்களுக்கு ஒரு மாதம் எத்தனை பிரச்சினைகள் வருகின்றது என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அண்ணளவாக குறைந்தது 10 பிரச்சினைகள் வருகின்றது என்று சொன்னார்கள். அதே கேள்வியை குவாசி நீதிமன்றத்தில் கேட்ட போது அவர்களுக்கு 40, 45 பிரச்சினைகள் குறைந்த பட்சம் வருகின்றது என்று சொன்னார்கள். ஏன் அந்த குவாசி நீதிமன்றத்திற்கு போகாமல் Counselling Unit இற்கு இந்த 10 வந்ததற்கு 40 பிரச்சினைகளும் வந்தால் அவர்களுக்கு 50 வீதமாவது அவர்கள் சரி செய்து கொடுப்பார்கள்.

ஆனால் குவாசி நீதிமன்றத்திற்கு சென்று சொன்னேன். ஏன் நீங்கள் இந்த Counselling Unit இனை பாவிப்பதில்லை. அதாவது மக்களுக்கு தெரியாததனால்தான் இங்கு வந்து நிற்கின்றார்கள். நீங்கள் அதை பிரதேச செயலகத்திற்கு சென்று ஒரு துண்டை எடுத்துவிட்டு வந்து மீண்டும் உங்களது விவாகரத்து விளக்கமாக கேள்வி எழுப்பலாமே சேர் என்று கேட்டதற்கு குவாசி நீதிமன்ற சலாம் சேர் சொன்னார் எங்களுக்கு அப்படி செய்வதற்கு அனுமதி இல்லை என்று, அவ்வாறு அங்கு சென்று துண்டு எடுத்து வாங்கள் என்று சொல்வதற்கு அனுமதி இல்லை. அவ்வாறு அனுமதி இல்லை என்றால் ஏன் நாங்கள் இந்த பிரதேச செயலகத்திற்கு ஒரு Unit இருக்கின்றது தானே அந்த Unit இனை அந்த நீதிமன்றம் நடக்கும் போது அந்த தொழிலாளர்களை குவாசி நீதிமன்றத்திற்கு எடுக்க முடியாதா? என்று இது ஒரு கேள்விதான். நாங்கள் 20 பேர் இங்கு இருக்கின்றோம். அதில் விசேடமாக 05 பெண்கள் இருக்கின்றார்கள். ஆனால் பெண்களுக்குதான் இவ்வாறான பல பிரச்சினைகள் இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகள் ஏற்படுவதனால் சிறுவர்கள் மத்தியில் அவர்களுடைய கல்வியில் பிரச்சினை இருக்கின்றது, அவர்களுடைய சுகாதாரத்தில் பிரச்சினை ஏற்படுகின்றது. நாங்கள் குடும்பமாக இருந்தால்தான் அவர்களுடைய கல்வியிலையோ, சுகாதாரத்திலையோ, உடல் நிலையிலையோ எல்லா விதத்திலும் அவர்களின் முன்னேற்றத்தை காணலாம்.

வீட்டில் தாய்க்கும் தந்தைக்கும் பிரச்சினை என்றால் பிள்ளைகள் எவ்வாறு படிப்பது. எவ்வாறு அவர்களது உடம்பு நிலையை பாதுகாப்பது, அவர்களது உணவில் எவ்வளவு பிரச்சினை ஏற்படும். ஆகவே நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் கட்டாயமாக மக்களினுடைய பிரச்சினைகளை வெளியில் கொண்டு வர வேண்டும். இது முன்பும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். ஆனால் இது கட்டாயமாக நடைமுறைக்கு வர வேண்டும். என்னுடைய கருத்து என்னவென்றால் இங்கு இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். உங்களுடைய கருத்துகளையும் வெளிக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, எங்களுக்கு 2019 இல் 84 பிரச்சினைகள் வந்திருக்கின்றது. அதில் 54 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக 50 வீதத்திற்கு மேற்பட்ட பிரச்சினைகளை Counselling Unit தீர்த்திருக்கின்றது. 2020 இல் 40 பிரச்சினைகள் வந்திருக்கின்றது அதில் 27 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால் குவாசி நீதிமன்றத்தில் ஒரு மாதத்திற்கு 42 பிரச்சினைகள் வந்திருக்கின்றது. ஆனால் அங்கு 30 பிரச்சினைகள் Divorce ஆகி இருக்கின்றது.

பெண்களாக எங்களை எடுத்துக் கொண்டாலும் பெண்களுக்கு சில குண இயல்புகள் இருக்கின்றது. அதை அவர்கள் பிறப்பிலையோ அல்லது வளர்ப்பிலையோ மாற்றிக் கொள்ள முடியாது அவர்களுக்கு பெண்கள் என்ற பெயரோடு வந்ததுதான் அந்தப்பிரச்சினைகள். ஆகவே

நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால் அவர்களுக்கு எங்களால் முடிந்த உள ரீதியாகவோ, பொருள் ரீதியாகவோ முடிந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொடுக்க வேண்டும். ஆகவே என்னுடைய கருத்துப்படி என்னவென்றால் இதை நாம் ஒரு Chain வடிவத்தில் கொண்டு வர வேண்டும் என்றால் எங்களுடைய பிரச்சினைகள் குவாசி நீதிமன்றத்திற்கு வருகின்றதா? அந்த குவாசி நீதிமன்றத்தால் சொல்ல வேண்டும் நீங்கள் Counselling செய்து அந்த துண்டை எடுத்து வந்து என்னிடம் வாங்கள் என்று அவர்கள் கருத்து சொல்ல வேண்டும். கருத்து சொன்னதற்கு பின்னர் 30 Divorce வருகின்றது என்றால் இன்ஷா அல்லாஹ் 05 அல்லது 10 Divorce உடன் நிற்கும். நீங்கள் உங்களது கருத்துக்களையும் சொல்லி கட்டாயமான தீர்வுகளையும் அனைவருக்கும் உதவி செய்வீர்கள் என்ற எண்ணத்தோடு நான் விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சமாதானக் கல்வி இணைப்பாளராக இருந்த காலத்தில் Conselling Meeting இல் கலந்து கொண்டிருக்கின்றேன். அதில் பலதரப்பட்ட பிரச்சினைகள் வரும். நன்னடத்தை அதிகாரி அவர்கள் எல்லோரும் சேர்த்துதான் நடத்துவார்கள். முதலாவது 2015ம் ஆண்டு சம்மாந்துறையில் மட்டும் 553 திருமணங்கள் நடந்திருக்கின்றது. ஆனால் அதில் தலாக் 40, பசகு 56. 2016ம் ஆண்டு 552 திருமணங்கள் நடந்திருக்கின்றது அதில் தலாக் 48, பசகு 45. 2017 ஆம் ஆண்டு 578 திருமணங்கள் நடந்திருக்கின்றது அதில் தலாக் 41, பசகு 34. அடுத்தது குறைந்த திருமணம் இஸ்லாம் அனுமதிப்பது பருவம் எந்த வயதில் அடைகின்றார்களோ அப்போது திருமணம் செய்து கொடுக்கலாம். அதற்கும் ஒரு விதி இருக்கின்றது என்ன என்று சொன்னால் அண்மையில் ஆபிரிக்கா கண்டத்தில் 100 வயதுடைய ஒருவர் 16 வயது பெண்ணை திருமணம் முடித்திருக்கின்றார். இது சட்ட ரீதியான பிழை என்று சொல்லி பல மாற்று மதத்தவர்கள் கேட்கின்ற நேரம் உண்மையாக என்ன என்று சொன்னால் அந்தப் பெண் ஏற்றுக் கொள்கின்றதா? அவரை ஏற்றுக் கொண்டால் அது அனுமதிக்கப்படுகின்றது. எமக்கு பிரச்சினை இல்லை. அவர்கள் இருவருக்கும் ஒற்று உறவு இருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

திருமண விடயத்தில் அவர்கள் தொட்டுக் காட்டிய விடயம் சிறுவர்கள். இவர்களது எதிர்காலம் என்ன? எப்படி இவர்களை வழி நடத்துவது? இந்த Divorce இனை குறைக்க வேண்டும். சேர்ந்து வாழ்கின்ற தன்மையை கூட்ட வேண்டும் என்பதுதான் தொனிப் பொருளாக இருக்கின்றது. சிலர் வஞ்சிக்கப்பட்டவர்களுக்குதான் அதன் பெறுமதி தெரியும். எனக்கு ஒரு காயம் எற்பட்டு அதை வெட்டி அல்லது நான் கஸ்டமாக உயிர் பிரிகின்ற தருவாயில் Ambulance இல் ஏற்றிச் சென்று அதற்கு சிகிச்சை நடக்கின்ற போது தற்போது நான் இருக்கும் போது அந்த சத்தம் கேட்டால் அந்த உணர்வு ஒன்று வரும். அதுமாதிரி அனுபவித்தவர்களுக்குதான் அது தெரியும். இங்கு குறிப்பிடும் போது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் சொன்னார்கள் பெண்களை உண்மையிலே அந்த எண்ணம் பெண்களிடம் இருக்கக் கூடாது. பெண்களுக்கு எல்லாவற்றிலும் அவர்களாகத்தான் அந்த எண்ணப்பாட்டை உருவாக்கின்றார்களே தவிர சில இடங்களில் ஆண்கள் பயப்பட வேண்டிய நிலையும் இருக்கின்றது.

ஆனால் பெண்கள் சாதனை செய்தவர்கள், சாதிக்க வேண்டியவர்கள். இந்த சபையில் கூட உங்களுக்குதான் கூடுதலான அனுமதியும் தந்து மாதர் தினம் வருவதால் சொல்லுகின்றேன். புத்தன் என்றாலும் சரி, இயேசு என்றாலும் சரி, காந்தியடிகள் என்றாலும் சரி ஒரு பெண்ணால் தான் உலகத்திற்கு வந்திருப்பார்கள். என்னுடைய கணிப்பீட்டின் படி பெண்கள்தான் உயர்வானவர்கள். ஆண்களை அவ்வாறு சொல்ல இயலாது. ஆண்கள் சில உடற்கூறுகளால் வலிமை மிக்கவர்களாக இருக்கலாம். அதை நாங்கள் சில உடற்கூறுகளை வைத்து கணித்துக் கொள்கின்றோமே தவிர எவருக்குமே இறைவன் சளைத்ததாக மூளையை படைக்க இல்லை. ஐன்ஸ்டீனின் மூளையும் தான், காமாட்ஸ் மூளையை கூட துண்டு துண்டாக வெட்டிப் பார்த்த நேரம் எந்தவொரு வித்தியாசமும் வைக்கவும் இல்லை. நாட்டாமை வேலை செய்கின்றவர்களின் மூளையும் சமம் என்றுதான் சொல்லப்படுகின்றது. எனவே எந்தவொரு கட்டத்திலும் நபி (ஸல்) அவர்கள் கூட சொல்லி இருக்கின்றார்கள் தாயின் பாதத்திற்கு கீழ்தான் சுவர்க்கம் இருக்கின்றது என்று, தகப்பனின் பாதத்திற்கு கீழ் என்று சொல்லவில்லை. முதலாவது முறையும் தாய்

என்றுதான் சொல்லி இருக்கின்றது. இரண்டாவது முறை கேட்டதற்கும் தாய் என்றுதான் சொல்லி இருக்கின்றது. மூன்றாவது முறை கேட்டதற்கும் தாய் என்றுதான் சொல்லப்பட்டு இருக்கின்றது. அப்படி உயர்வாக்கப்பட்ட பெண்களை நீங்களாக பார்த்து பெண்களுக்கு இவ்வாறு இருக்கின்றது. அவர்களுக்கும் அச்சம், மடம், ஞானம், பயிர்ப்பு என்று இருக்கின்றது. ஆண்களுக்கும் அதே போல் 04 மொழி இருக்கின்றது. அதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெண்களை மட்டும்தான் அச்சம், மடம், ஞானம், பயிர்ப்பு என்று சொல்கின்றோம். ஆண்களுக்கு இருப்பதையும் நாங்கள் சொல்ல வேண்டும். எங்களுக்கு முக்கியமானது என்னவென்றால் இந்த Divorce இனால் எந்த ஒரு பாவமும் செய்யாத பிள்ளைகள் கல்வி இல்லாமல் போகின்றது. சில காழி நீதிமன்றத்தில் இருக்கின்றவர்கள் Counselling இற்கு அப்பாற்பட்டவர்கள். சில அனுபவங்களை வைத்துக் கொண்டு அவர்களும் முயற்சி செய்து சேர்த்துக் கொள்ளலாம் என்று பார்க்கின்றார்கள். ஆனால் அங்கு பேசப்படுகின்ற பேச்சுக்களும், கேட்கப்படுகின்ற கேள்விகளும் சிலர் காழி நீதிமன்றத்திற்கே போகாமல் பசகு செய்வது. ஆனால் குடும்பங்கள் சேர்ந்து வாழ்வதற்கு நிறைய இடம் இருக்கின்றது. இதில் 2,3 பிரச்சினைகள் இருக்கின்றது. சிலருக்கு தாழ்வுச் சிக்கல் ஆண்கள் தான் வலிமையான ஆண் என்று நினைத்து சில பெண்களை நடத்திக் கொள்கின்ற விதம். சில பெண்கள் எமது எல்லா வசதிகளையும் கொடுத்து எடுத்துவிட்டோம் நாம் சொல்வதை மாத்திரம் கேட்க வேண்டும் என்ற இப்படியான ஒரு சில நடைமுறைகளால் அவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் ஒரு பாவமும் செய்யாத குழந்தைகள் தாயையும் தனப்பனையும் பிரிந்து கஸ்டப்படுகின்றார்கள்.

ஹிட்லர் கூட ஏன் இப்படியான நிலமைக்கு வந்த என்றவுடன் தன்னுடைய தாய்க்கு நடந்த கொடுமையினை வைத்துதான் அந்த நிலைக்கு வந்திருக்கின்றார். ஆபிரிக்கா லிங்கன் கூட சொல்லியிருக்கின்றார் என்னுடைய தாய் ஊட்டிய அன்பினால்தான் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வந்திருக்கின்றேன் என்று, அதே போல் நெப்போலியன் கூட அதே வார்த்தையைத்தான் சொல்லி இருக்கிறார். எனவே இந்த விடயத்தில் பிள்ளைகளை மையமாக வைத்து எதிர்கால சிறார்களை வைத்துதான் நாம் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். ஒரு பாவமும் அறியாத பிள்ளைகள் அவர்கள் தாய் தந்தையை மரணிப்பது வேறு இருந்தும் பிரிந்து வாழ்கின்ற வாழ்க்கை வரக் கூடாது என்பதற்காக நாங்கள் ஆக்கபூர்வமாக Counselling மட்டுமல்ல நாமும் வேண்டும் என்றால் அப்படியான Unit இனை உருவாக்கி இந்த ஆலோசனை வழங்குவதற்கு ஒரு பிரிவை உருவாக்கலாம். ஒரு Doctor பிழை செய்தால் அது ஒரு உயிரோடு சென்றுவிடும். ஒரு ஆசிரியர் பிழை செய்தால் அந்த சமூகமே கெட்டுவிடும். ஆகையால் பண்பான முறையில் எல்லோரும் ஒருமித்து எதிர்கால சிறார்கள் என்பதை மையமாக வைத்து நாங்கள் இதில் முடிவு எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அச்சி முஹம்மட் அவர்கள் சொன்னது எனது கருத்தை பிழையாக நினைத்திருக்கின்றார். ஏனென்றால் பெண்கள் வீட்டின் கண்கள் என்பார்கள். இது எப்போதும் நாங்கள் சொல்வதுதான். ஆனால் நான் சொல்லுவது ஆண்களின் குணங்கள் தெரிந்தாலும் பெண்கள் மாற்றுக் கருத்து சொல்ல முடியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதன் சாராம்சம் என்னவென்றால் விகிதாசாரம் பார்த்தால் கிட்டத்தட்ட 18%, 20% திருமணங்கள் ஒரு வருடத்திற்கு விவாகரத்தில் முடிகின்றது. இதை குறைப்பதற்கு என்ன வழிமுறை? Counselling என்பது பல பிரச்சினைக்கு தீர்வு. சில திருமணங்களில் அந்தப் பெண், ஆண் இரண்டு பேரும் தயாரில்லை திருமண வாழ்க்கையை நடாத்துவதற்கு, குடும்பம் சேர்த்து வைத்துவிட்டது. அவர்களுக்கு கட்டாயம் Counselling முக்கியம். இதற்கு இருக்கின்ற சட்டப்படி விதிமுறை குவாசி நீதிமன்றம். ஆனால் சமூகத்தில் ஒரு அழுத்தத்தை உருவாக்கி அதை எப்படி சமூகத்தின் பங்களிப்போடு ஒழுங்குபடுத்தலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களின் பிரேரணை உண்மையிலே வரவேற்கத்தக்கது. Counsellor வைத்து இதை குறைக்கலாம் என்பதை ஒரு பக்கம் வைத்து ஏனென்றால் நான் Counselling முடித்த ஒருவராக இருப்பதால் சொல்கின்றேன். இது உண்மையாகவே பழைய காலத்தில் தாய் தந்தையர்கள் விவாகரத்து என்பது குறுகிய ஒரு தொகையாகத்தான் இருந்தது. இப்போது கணனி தொழில்நுட்பவியல் என்ற ஒன்று உருவாகியதன் காரணத்தால் Facebook, Whatsapp இவை எல்லாம் அதிகரித்ததன் காரணமும் இந்த விவாகரத்திற்கு ஒரு உந்துகோள். ஏனென்றால் அண்மையில் சிறியதொரு கருத்தரங்கிற்கு சென்றிருந்தேன். உண்மையாக Facebook நிறுவனம் வந்து Facebook இனை நிறுவனமாக நடாத்திக் கொண்டிருக்கின்ற ஒருவர் என்ன சொல்கின்றார் என்றால் தொழிலுக்காகத்தான் Face Book என்ற ஒன்றை திறந்தேன். ஆனால் நான் அதனை பார்ப்பதற்கு நேரமில்லை. எனது மனைவிக்கு நான் உதவியாக இருக்கிறேன். எனது குழந்தைகளுக்கும் நான் உதவியாக இருக்கிறேன் வேலைகள் செய்வதில் என்று சொல்கிறார். உண்மையாக அதை விட்டுவிட்டு மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் உதவி செய்கின்றார். ஆனால் எங்களது பெண்கள் என்ன செய்கின்றார்கள் என்றால் பிள்ளைகள் சாப்பாட்டை கேட்டாலும் அதை எடுத்து திண்ணு என்று FaceBook இல் மூழ்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னுமொரு விடயம் Whatsapp இலோ IMO இலோ கணவனிடம் வெளிநாட்டில் இருந்து பேசுகின்றார்கள். இது வந்து இணையத்தளத்தில் எல்லோரும் பார்ப்பார்கள் என்பதை மறந்து எங்களது பெண்கள் சில விடயங்களை தவறுதலாக வெளிக்கொணர்வது. இவர்கள் வலையத்தளத்தில் இருந்தோ அல்லது எங்கயோ இருந்து இந்த இலக்கங்களை எடுத்து இவர்களின் தொலைத் தொடர்பை தொடர்வதால் ஆசாபாசங்களுக்கு அடிமையாகி கணவனை விவாகரத்து செய்வதில் பெண்கள் தான் மும்முரமாக இருக்கின்றார்கள். ஏனென்றால் அண்மைக் காலத்தில் கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்களுக்கும் தெரியும் எனது மலையடி 03 இல் ஒரு சம்பவம் ஒன்று நடந்தது. அது சம்மந்தமாக Counsellor பர்சானாவை தொடர்பு கொண்டும், Counsellor அசாத்தை தொடர்பு கொண்டும் அவர்களின் உதவியோடு அந்த பிணக்கை தீர்த்து வெற்றி கண்டவர். இந்த விடயம் பொலிஸ் பிரிவிற்கு செல்வது என்பதை உண்மையாக நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

ஏனென்றால் அந்த பொலீஸ் உத்தியோகத்தரிடம் உதவி தேடி போற நேரம் மாறாக அந்த பொலீஸ் உத்தியோகத்தருக்கு அந்தப் பெண்ணின் இடம் தேவைப்படுகின்றது. மிகவும் கவலைக்கிடமான விடயம் ஒன்று, இதற்கு தீர்வு என்பது மஹல்லா மட்டத்தில் ஏற்பட வேண்டும். எங்களது வட்டாரங்களில் இருக்கின்ற மஹல்லா மட்டத்தில் ஏனென்றால் நான் உண்மையிலே இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும் சில மஹல்லா இடங்கள் அமைந்திருக்கின்ற செயலாளர், பொருளாளர் எல்லாம் உண்மையாக தகுதியற்றவர்கள். அவர்களையும் மாற்றிக் கொள்ள வேண்டும். ஆகவே நாங்கள் இதனை நம்பிக்கையாளர் சபையோடு தொடர்பு கொண்டு அவர்களின் அனுமதியோடும் இந்த மஹல்லா வாசிகளின் குழு ஒன்றை எடுத்து எங்களது சபை உறுப்பினர்களையும் இந்த இடத்திற்கு ஒரு குழுவாக அமைத்து Counsellor தெரிந்தவர்களையும் அழைத்து இந்த விவாகரத்து என்பதை குறைத்துக் கொள்ளலாம்.

இன்னுமொன்று Counsellor என்ற விடயத்தில் சொல்ல வேண்டியது உண்மையாக அண்மையில் ஒரு பிள்ளை வந்தது வீடு தெரியாமல் என்னைத்தான் தேடி வந்தது. நான் எங்கு போகப் போகின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு Counsellor ஒருவரை சந்திக்கப் போகின்றேன். அவர் சொன்ன விடயம் என்னவென்றால் நான் அடிக்கடி வருவதற்கு பண வசதி இல்லை என்று, இந்த Counsellor கள் வீட்டில் பணம் அறவீடு செய்வதால் சிலருக்கு Counsellor ஐ சென்று சந்திப்பது கஸ்டமாக இருக்கின்றது. இது உண்மையாகவே நடந்த விடயம். ஆகவே Counsellor என்பவர்களுக்கு ஒரு இடம் பிரதேச செயலகத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்த இடத்தில் நேரத்தை ஒதுக்கிடலாம். இதற்கு உதவி வேண்டும் என்றால் EDO, சமுர்த்தி உத்தியோகத்தர்,

சமுர்த்தி கூட்டங்கள் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு முறை நடைபெறுகின்றது. இதன் ஊடாகவும் எடுக்கலாம். மஹல்லா வாசிகளின் உதவிகள் எடுக்கலாம். GS இன் உதவி எடுக்கலாம். எங்களது பிரதேசத்திலையோ விளிப்புணர்வுக் குழு ஒன்று இருக்கின்றது. அவர்களது உதவியும் எடுக்கலாம். எடுத்து இந்த Counsellor இற்கு நாங்கள் வழி நடத்தலாம். ஏனென்றால் இப்போது உண்மையாக திருமணம் என்பது ஒரு துஸ்பிரயோக மட்டத்திலே இட்டுச் செல்லப்பட்டிருக்கின்றது. குழந்தைகள் கூட Whatsapp இல் தாய்மார்கள் ஆபாசப்படங்களை பார்ப்பதை பார்த்துக் கொண்டிருந்து விட்டு சிறு பிள்ளைகளின் துஸ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

வெளியில் சொல்லப்பட்ட வீதம் இது. ஆனால் மறைமுகமாக எத்தனையோ வீதங்கள் இருக்கின்றது. ஒரு மனைவியின் கணவரை இன்னொருவள் பறித்தெடுப்பதும். பிள்ளைகளை துஸ்பிரயோகத்திற்கு வழிநடத்துவதும், கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களே துஸ்பிரயோக நிலைக்கு அந்த தாயை அழைப்பது. உண்மையாகவே இவைகள் கண்டிக்கப்பட வேண்டும் என்றால் நாங்கள் உரிய முறையிலே இதற்கு நம்பிக்கையாளர் சபையோடு தொடர்பு கொண்டு, மஹல்லா வாசிகளோடு தொடர்பு கொண்டுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். Counsellor மட்டும் இதை குறைக்கலாம் என்பது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். ஆகவே இதற்கு சபை ஊடாக ஒரு குழு ஒன்றை தயாரித்து முன்மொழிவு ஒன்றை உருவாக்கி எங்களது பிரதேச செயலகத்தின் அனுமதியையும் எடுத்து, நம்பிக்கையாளர் சபையின் அனுமதியையும் எடுத்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுவோமானால் இந்த விடயத்தில் வெற்றியடையலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையிலே சமூகத்தில் இருக்கின்ற சீரழிவு பிரச்சினைகளை கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் ஊடாக அவர் ஒரு பெண் கௌரவ உறுப்பினர் என்ற அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறார். அதற்கு சபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பெண் ஒரு நிலையில் இருந்து தாழ்த்தப்பட்டவள் என்று சொன்ன கௌரவ உறுப்பினரின் கருத்திற்கு கௌரவ உப தவிசாளர் சிறந்த உதாரணங்களை காட்டி அப்படி ஒரு மனநிலை வேண்டாம் என்று சொன்னார். நானும் ஒரு காரணத்தை கூறுகின்றேன். 2009.08.09 காலப்பகுதியில் செவ்வாய்க் கிரகத்தில் நாஸா விண்வெளி மூலம் அனுப்பப்பட்ட ஒரு ரோபா தரை இறங்கியது. அந்த விஞ்ஞானிகளில் நாஸா விஞ்ஞானி குழுவின் தலைவியாக ஒரு பெருமையோடு சொல்ல வேண்டும். ஒரு தமிழ் நாட்டு பெண் சகோதரி என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இன்று எமது சமூகத்தில் இருக்கின்ற சீரழிவானது அதற்கு எவ்வாறு நாங்கள் பிரதேச சபை ஊடாக தீர்வு எடுக்க வேண்டும் என்பதுதான் எமது முக்கியமான கரும் பொருளாக இருக்கின்றது.

ஆனால் இதற்காக அரசாங்கத்தில் தனியான அமைச்சுக்கள் உண்டு. அமைச்சின் செயற்பாடுகள் இருக்கின்றது. அதன் வடிவத்தின் அடிப்படையில்தான் அந்த நிர்வாக அடிப்படையில்தான் பிரதேச செயலகத்தில் Counselling Unit உருவாக்கப்பட்டிருக்கின்றது என்று நினைக்கின்றேன். அத்தோடு முஸ்லிம்களுக்கு தனியான ஒரு அமைச்சு இருக்கின்றது. அதன் ஊடாகவும் முஸ்லிம்களினது தனியான சட்டங்கள் மூலம் கொண்டு வருகின்ற இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்க்காததற்கு அரசாங்கம் ஏற்கனவே உள்ள நிலைகள் இருந்தன. தற்காலத்தில் அவ்வாறான தனியான சட்டங்களை எடுத்து விட வேண்டும். ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற எல்லோரும் உட்படுத்த வேண்டும் என்றுதான் இன்று இருக்கின்ற அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கொள்கையாகவும் நாட்டின் நடப்பாகவும் இருக்கின்றது. இந்த அடிப்படையில் குவாசி நீதிமன்றங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்படப்போகின்றது. இன்று இருக்கின்ற நீதி அமைச்சர் கௌரவ அலி சப்றி அவர்கள் பெண்களின் வயதெல்லை 18 ஆக மேற்கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகளை அமைச்சரவை முடிவின் பிரகாரம் மேற்கொண்டிருக்கின்றார்.

இந்த நிலையில் எங்களுக்குள் எங்களது ஊரை பொருத்தமட்டில் நாங்கள் எத்தனை பசகு செய்யப்பட்டது? எத்தனை தலாக் செய்யப்பட்டது? என்று நாங்கள் விவாதிப்பது உண்மையிலே கவலையான விடயமாகத்தான் இருக்கின்றது. ஒரு காலத்தில் அமைச்சு இருந்தது. அதன் பின்னர்

அமைச்சு தரமுடியாது திணைக்களம்தான் தரலாம் என்று சொன்னார்கள். தற்போது எதுவும் இல்லாத நிலையில் எமது எதிர்காலம் இருந்து கொண்டிருக்கின்றது. இருந்தாலும் எங்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பல தனியார் சட்டங்கள் இந்த நாட்டில் இருக்கின்றன. அதன் அடிப்படையில் முஸ்லிம்களுக்கும் ஒரு தனியார் சட்டம் இருக்கின்றது. இந்த அடிப்படையில் நாங்கள் எங்களது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதுதான் நாட்டில் இருக்கின்ற முஸ்லிம்களின் கவலையாக இருக்கின்றது. இப்போது நாங்கள் முகங்கொடுக்கின்ற இந்த பிரச்சினைகளுக்கு தனியே Counselling செய்கின்ற உத்தியோகத்தர்களை மட்டும் கொண்டு செய்ய முடியாத கருத்தை நானும் ஏற்றுக் கொண்டவனாக,

காழியாக குவாசியாக இருக்கின்றவர்கள் அவர்களிடத்திலும் பல தவறுகள் நடக்கின்றது. திருமணத்தை முடித்து வைக்கின்ற தாய் தகப்பனிடத்திலும் தவறுகள் நடக்கின்றது. மஹல்லா அடிப்படையில் கொண்டு போக வேண்டும் என்பது அது ஒரு பெரிய வெற்றியை அளிக்காது என்று நினைக்கின்றேன். அதற்காக அதை விட்டுவிடுவதற்கும் இல்லை. இந்த அடிப்படையில் நீதி கேட்டு செல்லுகின்ற இடத்திலும் பல தவறுகள் ஏற்படுவதாக பேசப்பட்டது. இதனால் ஒரு விடயத்தை சொல்லியிருந்தேன். இறக்காம காழி நீதிபதியை அவருடன் எனக்கு மிகவும் நெருக்கம் அவர் ஒரு கதை சொன்னார். அவரை அடிக்கடி பேட்டி காண்பது அவர் சொன்னார் காழி நீதிமன்றத்திற்கு வருகின்ற பிரச்சினைகளில் தலாக் கணவன் மனைவிக்கு தேவைப்படுவதில்லை அவர்களது தாய் தகப்பனுக்குதான் தேவைப்படுகின்றது. ஆகவே எனது நீதிமன்றத்திற்குள் உரிய நபர்கள் ஒருவர் மட்டும்தான் நுழையலாம். மற்றவர்கள் வரவும் முடியாது மூச்சு விடவும் முடியாது. எத்தனையோ பேரை நான் விரட்டி இருக்கின்றேன். ஏனென்றால் வழிகெடுப்பது அந்த ஆணின் பெற்றோரும் அந்த பெண்ணின் பெற்றோரும் தான். அப்படியான நிலையில்தான் நான் எனது கடமையை செய்கின்றேன். என்னிடத்தில் எவருமே வரமாட்டார்கள் தலாக் செய்வதற்காக, மிகவும் அரிது ஏனென்றால் நடப்பதில்லை.

ஆனால் சில குவாசி நீதிபதிகள் அவர்களது சில சுய இலாபங்களுக்காக அந்த தலாக்கை மேற்கொள்கின்றார்கள். என்பதான கவலையான விடயங்களும் கேள்விப்படுகின்றோம். ஆகவே நாங்கள் இந்த விடயத்தில் பிரதேச சபை கௌரவ உறுப்பினர்கள் ஊடாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் இதற்காக இருக்கின்ற அரச உத்தியோகத்தர்களாக சிறுவர் நன்னடத்தை அதிகாரி, Councellor, எங்களது ஊரில் இருக்கின்ற உலமா சபை, பொலீஸ் உத்தியோகத்தர், GS, அவர்களுடன் விரும்பினால் எங்களது கௌரவ உறுப்பினர்களையும் சம்பந்தப்படுத்த தேவை ஏற்பட்டால் அவர்களையும் இணைத்துக் கொண்டு ஒரு சபையை உருவாக்கி அந்த குழுவின் ஊடாக ஒரு இறுதி முடிவை எடுத்த பின்னர்தான் தலாக் விடயங்களை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறான பொலிஸுக்கு போக வேண்டும் என்ற பிரச்சினைகளை நாங்கள் அவர்களை வழிகாட்டனுமே தவிர எல்லா இடத்திற்கும் சென்றால் திருமண தலாக் வீதம் கூடிக் கொண்டுதான் போகும். ஆகவே இவ்வாறான நிகழ்வுகளை எதிர்காலத்தில் நாங்கள் முன்னெடுத்தால் சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, முக்கியமான ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். இது உண்மையிலே வரவேற்கத்தக்கது. எங்களது சம்மாந்துறை வைத்தியசாலையில் Unmerried பிரவசம் நடைபெறுவதால் இது முன்பு நடைபெறுவதில்லை. பிறப்பு பதிவு வைப்பதற்கு தகப்பனின் சகல ஆவணங்களும் அதாவது விவாகப் பதிவில் இருந்து அவரது அடையாள அட்டை எல்லாம் வேண்டும். ஆனால் Unmerried ஆக ஒரு தாய் குழந்தை பெற்றவள் மிகவும் கஸ்டப்படுகின்றார் அந்த குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியில் செல்வதற்கு. கிராம சேவகர் அனுமதியும் வேண்டும். இப்படியான கட்டம் ஒன்று அண்மையில் நடந்திருப்பதால் எங்களது வைத்திய அத்தியட்சகர் Doctor அஷாத் அவர்களால் கடைப்பிடித்ததால் இந்த Unmerried பிரவசம் நடைபெறுவது குறையும் என்று நினைக்கின்றேன். கடும் இறுக்கமான கட்டத்தில் அண்மையிலும் ஒரு தாய் நேற்றுதான் விடுதலைசெய்து போனார். 02 கிழமையாக அதற்கான ஆவணங்கள் வரும் வரைக்கும் விடுதியிலே இருந்தார். முதலும் ஒரு தாய்க்கு அவ்வாறுதான் செய்தது.

ஏனென்றால் முதல் குழந்தை ஒன்றுக்கு பதிவு வைக்காமல் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கின்றது. ஆகவே இந்த விடயத்தில் நாங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லி கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களின் கருத்தை உள்வாங்கியவளாகவும், அதுவும் மகளிர் தினமான இந்த மாதத்தில் மகளிர்கள் சம்மந்தப்பட்ட பிரேரணையை கொண்டு வந்தது வரவேற்கத்தக்க ஒரு விடயம். முதலாவது எனது கருத்து திருமணம் என்று சொன்ன கருத்தில் குழந்தைகளின் கல்வி பாதிப்பு மட்டுமல்ல குழந்தைகளின் உயிருக்கு கூட அச்சுறுத்தலான நிலை ஏற்படுகின்றது. கணவனும் மனைவியும் பிரிந்து குடிகார கணவனுக்கு வாக்குப்பட்ட மனைவியால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவம் 03 குழந்தைகளின் உயிரும் பரிதாபமான நிலையில் பரிக்கப்பட்டது. கிணற்றில் தூக்கி வீசப்பட்டது. ஏன் அந்த தாய்க்கு உரிய முறையில் Counselling கொடுக்கப்படாதது. அடுத்தது அந்த தாயோடு இருந்த குடும்பத்தினரின் அரவணைப்பு இல்லாமல் போனது. கணவனால் துன்புறுத்தப்படுகின்ற எந்த ஒரு மனைவிக்கும் அந்த மனைவிசார்ந்த குடும்பத்தில் இருந்து தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். இப்ப இருக்கின்ற காலத்தில் அப்படியான சந்தர்ப்பம் உருவாவதில்லை.

திருகோணமலையில் ஒரு சம்பவம் இடம்பெற்றது வெளிநாட்டில் இருந்து ஒரு குழந்தையை எடுத்து வந்த பெண் அந்த கணவனுக்கு Video அனுப்ப வேண்டும் என்பதற்காக சமூக வலைத்தளங்களில் Video வந்தது. 09 மாத குழந்தையை அடித்து துன்புறுத்தி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏனென்றால் திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்ற திருமணம் ஒரு நாளும் சொர்க்கமாக இருப்பதில்லை இப்ப இருக்கின்ற திருமணம். அவர்களது இச்சைக்காக அவர்களது வெறும் ஆசைக்காக மட்டும் அந்தப் பெண்ணை பாவித்துவிட்டு அடுத்த தடவை விட்டுவிட்டு போகின்றார்கள். அதனால் அந்தப் பெண் கணவன் இல்லாத துன்பம் மட்டுமல்ல குழந்தையை வளர்ப்பதற்கு மிகவும் கஸ்டப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. எமது சம்மாந்துறையினை எடுத்துக் கொண்டால் திருமணத்தில் அதாவது திருமணம் முடித்து விட்டுவிட்டு போன கணவன் வெளிநாட்டில் 02, 03 வருடம் இருந்துவிட்டு குறிப்பிட்ட பொருளாதாரத்தோடு வந்தால் அவர் என்ன காரணத்தால் மனைவியை விட்டு பிரிந்தார், மனைவியின் பக்கத்தில் போய் நியாயம் கேட்பதில்லை. அவர் அப்படித்தான் இருந்திருப்பார் என்று 02வது திருமணத்தை முடித்துக் கொடுக்கின்றார்கள். அதனால் இன்னொரு பெண்ணின் வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது. Divorce இற்கு போற அளவுக்கு வருகின்ற திருமணத்திற்கு முக்கிய காரணம் தாய் தகப்பன். கணவன் மனைவிகளாக இருக்க முடியாது. ஏனென்றால் விசாரித்து பார்க்காமல் திருமணம் முடித்துக் கொடுப்பது.

அடுத்தது தனிமையில் வாழ்கின்ற பெண்களுக்கு நிறைய பிரச்சினைகள் வருகின்றது என்று சொன்னால் கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் கூறினார் நியாயம் கேட்டுப் போகின்ற இடத்தில் பிரச்சினை என்று, அந்தப் பெண்ணுக்கு பிரச்சினை வருவதற்கு காரணம் பெண்ணின் பக்கத்தில் இருக்கின்ற உறவினர்களின் ஒழுங்கான பாதுகாப்பு இல்லாதது. ஒழுங்கான பாதுகாப்போடு அந்தப் பெண் இருந்தால் யாருமே அந்த பெண்ணிடம் தீண்டப் போகின்ற அளவுக்கு நடக்க மாட்டாது. இதனால் பெண்களின் வாழ்க்கை மட்டுமல்ல பெண்களை சார்ந்து இருக்கின்ற எத்தனை குழந்தைகளை பெற்று எடுக்காவோ அத்தனை குழந்தைகளுக்கும் உரிய முறையில் அறிவு, போசாக்கு, பாதுகாப்பு அனைத்தையும் கொடுக்க வேண்டியது தாயின் கடமையாகின்றது. அந்த தாய்க்குரிய Counselling உரிய முறையில் கொடுக்கப்பட வேண்டும். உங்களது நடவடிக்கைகளை இப்படித்தான் வளர்க்க வேண்டும். கணவன் இல்லை என்று சொன்னால் இப்படி நடக்க வேண்டும் என்று, அல்லாஹ் விரும்பியதில் வெறுத்தது விவாகரத்து. விவாகரத்திற்கு போனால் உங்களது வாழ்க்கை இப்படித்தான் மாற வேண்டும் இப்படியான வழிமுறையில் நடக்க வேண்டும் என்று உரிய முறையில் Counselling கொடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்களை காசு கொடுத்து Counselling செய்ய இயலாவிட்டால் அரசாங்கத்தால் இருக்கின்ற Counselling unit இனை பயன்படுத்தி பெண்களுக்கு இருக்கின்ற பாதுகாப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்பதோடு,

கடந்த அரசாங்கத்தில் மகளிர் விவகார அமைச்சு என்று இருந்தது. பெண்களுக்குரிய பிரச்சினைகளை சொல்வதற்கு ஆனால் இந்த அரசாங்கத்தில் மகளிர் விவகார அமைச்சு இல்லை. ஆனால் எங்களது சபை மூலமாவது இப்படியான பிரேரணையை வைத்து பெண்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை தீர்த்துக் கொள்வதற்குரிய வழிமுறைகளை இதில் GS ஆக இருக்கலாம். சமூர்த்தி உத்தியோகத்தராக இருக்கலாம். பொலிஸாக இருக்கலாம். நீதி கேட்டுப் போகின்ற இடத்தில் அவர்களது பார்வை வித்தியாசமாகத்தான் இருக்கும். வளைந்து கொடுக்காமல் பேச வேண்டியது பெண்களிடம் தான் இருக்கின்றது. வளைந்து கொடுக்காமல் பேசி அவர்களது நியாயத்தை வென்றெடுக்க வேண்டும். பெண்களுக்கு அல்லாஹ் சக்தியை கொடுத்து இருக்கின்றான் தன்னையும் கவனித்து அவளது குடும்பத்தையும் கவனிக்கக்கூடிய அளவுக்கு சக்தியை கொடுத்து இருக்கின்றான். அதனால் பெண்கள் வீட்டின் கண்கள் மட்டுமல்ல உலகத்திற்கே கண்களாக இருக்க வேண்டிய பெண்களாக நான் என்னுடைய கருத்து. ஏனென்றால் நான் அப்படி இருக்கின்றேன். எனக்கு தெரியும் எப்படி வாழ வேண்டும் என்று எனக்கு நான்தான் Counselling கொடுத்தது. நான் யாரிடமும் Counselling தேடவில்லை. எப்படி இருக்க வேண்டும் என்னமாதிரி வாழ வேண்டும் எப்படி கதைக்க வேண்டும் என்ற தத்துவத்தை அல்லாஹ் எனக்கு தந்திருக்கின்றான். அதே மாதிரி ஒவ்வொரு பெண்களும் இந்த ஆயுதத்தை கையில் எடுத்து அவர்களின் பாதுகாப்பை அவர்களின் உடமைகளை வென்று எடுக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த சபைக்கு எத்தி வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் முக்கியமானது சமூகத்தில் இருக்கின்ற பாரிய பிரச்சினைகளுக்கு சபையின் பங்களிப்போடு அப்படி ஒரு பரிந்துரை உருவாக்குவது. ஏனென்றால் முதல் சொன்னமாதிரி விவாகரத்து நேரே பாதிக்கப்பட்டால் போற இடம் காழி நீதிமன்றம். அதற்கு முதல் அந்த மஹல்லா ரீதியில் சமூகத்திற்குள் இந்த பிரச்சினை பார்க்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்துதான். ஏனென்றால் சமூக அழுத்தத்தினால் பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று நாம் பிரதேச சபை என்ற ரீதியில் நாம் நம்பிக்கையாளர் சபை, உலமா சபைகளோடு பேசி நாம் சமூகத்திற்குள் ஒரு கட்டுப்பட்டு நாட்டுக்கு ஒரு சட்டம் இருக்கின்றது. Counselling என்பது ஒரு Counsellor ஆல் மட்டும் செய்ய வேண்டியதாக இல்லை. சில சமூகத்தில் Counsellors அனுபவ ரீதியாக இருப்பார்கள். அவர்களை பாவித்து ஏனென்றால் ஒரு மஹல்லாவில் இருக்கின்ற பிரச்சினை மஹல்லா வாசிகளுக்கு நன்றாக தெரியும் ஒரு விவாகரத்து நடக்கின்றது என்றால் அதன் பிண்ணனி என்ன என்பது அவர்களுக்கு தெரியும் காழியாரை விட, அவர்களின் பங்களிப்போடு தான் அந்த level இற்கு போக வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது பிரதேசத்திற்குள் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். முஸ்லிம் மக்களைப்பற்றி ஆனால் தமிழ் மக்களையும் எடுக்க வேண்டும். அதற்கு கோயில் நிர்வாகங்களையும் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக தமிழ் சமூகத்திற்குள் இது பெரிதளவு பேசப்படுவதில்லை. ஏனென்றால் ஆகக் குறைவு.

**கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறைவு என்னவென்றால் முதலாவது பிரச்சினை மதுபானம். மதுபானத்தினால் மூடி மறைக்கப்படுகின்றது. மதுபானத்தினால் குடும்பத்திற்குள் சண்டை வருகின்றது. இதனால் Divorce இற்கு போடுகின்றார்கள். குழந்தைகளை அந்த வருமானத்தைக் கொண்டு வளர்க்க இயலாமல் இருக்கின்றது. 1000.00 ரூபா உழைத்து வந்தால் அவருக்கு 600.00 ரூபா, 700.00 ரூபா குடிக்கு மட்டும் செலவாகின்றது. இதற்குள் எப்படி பிள்ளைகளை கவனிப்பது, பிள்ளைகளுக்கு போசாக்கான உணவு அளிக்கப்படுகின்றதா? ஒன்றுமே இல்லை. இதனால் சண்டை வருகின்றது. சண்டை ஏற்பட்டால் நேரடியாக பொலிசுக்கு போகின்றார்கள், Divorce

இற்கு போடுகின்றார்கள். இதுதான் நடக்கின்ற பிரச்சினை. இதனால் நிறைய பிரச்சினைகள் மூடி மறைக்கப்படுகின்றது. அண்மையில் கிளிநொச்சியில் நடந்தது என்ன யாரிடம் சொல்லுவது என்று தாயும் பிள்ளைகளும் சாக வேண்டும் என்றுதான் அந்த மனநிலையை வெளியில் சொல்ல இயலாமல் நானே இப்படியான வாழ்க்கையை தேடிக் கொண்டேன். நானே முடிவு எடுக்கிறேன் என்றுதான் வெளி உலகத்திற்கு போவதில்லை.

ஆனால் DS Office இல் எனது தம்பி ஒருவர் வேலை செய்கின்றார். அவர் கொடுத்த Counselling இல் எங்களது மல்வத்தை பிரதேசத்தில் இரண்டு பேர் நன்மை அடைந்திருக்கின்றார்கள். ஒரு பிள்ளை பாடசாலைக்கு போவதில்லை. அவர்களை எடுப்பித்து அவர்களது வீட்டிற்கு சென்று சந்தித்து அந்தப் பிரச்சினையை சொல்லி தற்போது பாடசாலைக்கு செல்கின்றது. அதே மாதிரி கணவன் மனைவி இரண்டு பேருக்கும் ஏற்பட்ட பிரச்சினையையும் சுதர்சன் என்று பிரதேச செயலகத்தில் வேலை செய்கிறார். அவர் இந்தப் பிரச்சினையை எடுத்து இப்போது 02 பேரும் சந்தோசமாக இருக்கின்றார்கள். Counselling என்பது மிகவும் முக்கியமான விடயம். Counselling என்பது எதையும் மாற்றலாம். மனநிலை எப்படியும் மாறலாம். சிலர் மனநிலை மாறாவிட்டாலும் பெரும்பாலான மனநிலை Counselling இனால் மாறுகின்றது. தமிழ் பிரதேசத்தில் குறைவு ஏனென்றால் வெளி உலகத்திற்கு வருவதில்லை.

முதலாவது குடி, மதுபானம் விற்பவர்களுக்கும் நான் GS ஊடாக கதைத்து சொன்ன போது அவர்கள் என்னிடம் கேட்ட கேள்வி என்னவென்றால் எங்களது வருமானத்தை நீங்கள் தருவீர்களா? நாங்கள் இதை விற்பனை செய்து குடும்பத்தை கொண்டு போகின்றோம். GS கதைத்து அது நிற்பாட்டப்பட்டது. பின்னர் தொடர்ச்சியாக தொடங்கிவிட்டார்கள். எங்களுக்கு செய்கின்ற உதவி என்னவென்றால் கௌரவ தவிசாளர் அவர்களே, பொலிசோடு உட்பட பேசி வளத்தாப்பிட்டி மல்வத்தை வீரமுனை போன்ற தமிழ் பிரதேசங்களில் மதுபானம் விற்பதை முற்றாக தடை செய்ய வேண்டும். இதை பார்த்து பிள்ளைகளும் அப்பா குடிக்கின்றார் நானும் குடித்து பார்ப்போம் என்று அவர்களின் ஆசையை தூண்டுவதும் மதுபானத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. கௌரவ உறுப்பினர்கள் ஊடாக இந்த சபையில் கேட்பது முதலாவதாக மதுபானத்தை தமிழ் பிரதேசங்களில் இருந்து முற்றுமுழுதாக நிற்பாட்ட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மதுபானம் விற்கின்ற இடங்களின் தகவல்களை என்னிடம் இரகசியமாக தாருங்கள். கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது தமிழ் சமூகத்திற்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் இருக்கின்ற பாரிய ஒரு வித்தியாசம் என்ன என்று சொன்னால் தமிழ் சமூகத்தில் ஒரு விதவையை பார்க்கின்ற விதம் வேறு. விதவையாகுவதற்கு தயக்கம் கூட. ஆனால் இங்கு தைரியம் கூட. தமிழ் சமூகத்தில் ஒரு விதவையை சமூகமோ வித்தியாசமாக பார்ப்பதால் சமூக அழுத்தம் தான் வீதத்தை குறைப்பது. அங்கு குடிதான் பிரச்சினை இல்லாவிட்டால் அது இல்லை. கோயில் நிர்வாகம் சமூக தலைவர்களின் ஈடுபாடு கூட. இஸ்லாமிய பகுதிகளில் குறைவு. இதை உள்வாங்கி நம்பிக்கையாளர் சபை , உலமா சபையோடு கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுப்போம்.

## தீர்மானம் - 04/37/12

விவாகரத்து, சிறுவர்கள் சம்மந்தமான பிணக்குகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பாக நம்பிக்கையாளர் சபை, உலமா சபை, கோயில் நிர்வாகங்களுடன் கலந்துரையாடி அதற்குரிய முடிவுகளை எடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முதலாவதாக சிறுவர் பூங்காக்கள் இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றது. அதனை மிக விரைவில் திறந்து பொது மக்களுக்கு பாவனைக்காக விட வேண்டும். அதே நேரத்தில் அங்கு சில வேலைகள் செய்ய வேண்டி இருக்கின்றது. சிறுவர்கள் விளையாடுவதற்குரிய கடல் மண் போதாமல் இருக்கின்றது. அடுத்தது சிறுவர் பூங்காக்களிலே கடமையாற்றுகின்றவர்களுக்குரிய Watcher Hut செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சிறுவர் பூங்காக்கள் உண்மையாக இப்ப இருக்கின்ற பிரச்சினை MOH அனுமதி. நான் சனிக்கிழமை அனுதாரபுரத்திற்கு சென்று வருகின்ற போது பொலன்னறுவையில் Ganus Park Army Hotel ஒன்று இருக்கின்றது அதில் பார்த்தேன் Swimming Pool பாவிக்கப்படுகின்றது. நான் Officers இடம் சென்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள் Restricted Number உடன் swimming pool பாவிப்பது என்று இவர்கள் பார்ப்பது குழந்தைகள் Expose பன்னுவதை குறைப்பதற்கு, ஆனால் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதால் சிறுவர் பூங்காக்களை திறக்காமல் இருக்க இயலாது. நாம் உத்தியோகபூர்வமாக எழுதி அனுமதி எடுத்து ஆரம்பிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொரோனா பாதிப்பு கூடிய மாவட்டங்களிலே சிறுவர் பூங்காக்களை திறந்து விட்டிருக்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாங்கள் 2, 3 தடவை கேட்டிருக்கின்றோம். அவர்கள் Market திறப்பதற்கும் கஸ்டப்பட்டுதான் உள்வாங்கப்பட்டது. நிச்சயமாக இக் கிழமைக்குள் அந்த வேலைகளை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சமூக வலைத்தளங்களில் வந்த சில மதகுகள் சிறிய பாலங்கள் உடைந்தது. மிகவும் நீண்டகாலமாக நான் நினைக்கின்றேன் கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் அவர்களது வட்டாரத்திலே நூர்ப் பள்ளிவாசலை அண்மித்த பகுதியிலே Photo எடுத்து Facebook இல் போட்டிருக்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உடைந்த விடயங்களில் நான் தாமதிப்பதில்லை. Facebook இல் எழுதுவது வேறு விடயம். ஆனால் இதில் பாரிய ஒரு பிரச்சினை வருகின்றது அதாவது இது உடைவதற்கு காரணம் டம்ரெக் போகின்றது. அதனால்தான் உடைகின்றது. ஒருவரும் காட்டித் தருவதற்கு இல்லை. அந்த நேரம் போட்டது 03, 04 Inch தான். இதை செயற்படுத்துவதில் பிரச்சினை இருந்ததால்தான் அது தாமதமாகியது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஜனாசா அடக்கின்ற விடயத்தில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் தடையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டு சமூக வலைத்தளங்களில் வந்தது. சம்மாந்துறைக்கு ஒரு நல்ல பெயர் இருக்கின்றது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது அந்த ஜனாசாக்களை அடக்குவதற்கு மட்டுமல்ல இடம்பெயர்ந்து வந்த மக்களையும் வரவேற்ற ஊர் என்ற பெருமை ஒன்று சம்மாந்துறைக்கு இருந்து கொண்டிருக்கின்றது. அப்படி ஒரு பெருமைக்கு மெருகூட்டுகின்ற மாதிரி சம்மாந்துறையும் தயாராக இருக்கின்றது இந்த ஜனாசா அடக்கத்திற்கு நாங்கள் வழங்க தயாரா இருக்கின்றோம் என்ற செய்தி எங்களுக்கு பெருமையாக இருந்தது. ஆனால் அண்மையில் நடந்த சமூக வலைத்தளங்களில் வந்த விடயங்களை பார்க்கும் போது சம்மாந்துறை அதுவும் தவிசாளர் எதிர்ப்பு. இதற்கு நீங்கள் கூறியவாறு பதில் கொடுக்காமல் இருந்தால் நீங்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றீர்கள் என்று அரத்தம். ஆகவே இதற்கு நாங்கள் கட்டாயமாக பதில் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இதில் நீங்கள் மாத்திரம் சம்மந்தப்பட்ட விடயமோ அல்லது இந்த சபை சம்மந்தப்பட்ட விடயமோ அல்ல. இது சம்மாந்துறை

சம்மந்தப்பட்ட விடயம். சம்மாந்துறையின் பெருமை நற்பெயர் மாண்புகளுக்கு இழுக்கு ஏற்படுகின்றவாறு சில பதிவுகளை பாரக்கின்ற போது அதற்கு உடனடியாக பதில் வழங்க வேண்டியது உங்களது பொறுப்பு, இந்த சபையின் பொறுப்பு. எனவே இதனை அரசியல் நோக்கத்திற்காக பலர் பலவிதமாக எழுதி இருந்தாலும் உண்மையாக நடந்த விடயத்தை நீங்கள் வெளிக்காட்டி இந்த சபையும், ஊரும் தயாராக இருந்தது. அனுமதி தர வேண்டியவர்கள் தராததால்தான் அது நடைபெறவில்லை என்ற உண்மையை நீங்கள் வெளி உலகத்திற்கு சொல்ல வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை நான் சபையில் கதைத்ததற்கு காரணம் இதுதான். அரசியல் நோக்கத்தோடு செய்யப்பட்டது என்று வெளிப்படையாக தெரிய வந்துதான் அந்த பதிவு எடுக்கப்பட்டது. எனக்கு நவமணி Editor அமீன் கூட எடுத்து நீங்கள் எத்தனை தடவை இதைப்பற்றி என்னிடம் கதைத்து இருக்கின்றீர்கள். நான் எத்தனை தடவை உங்களிடம் கதைத்து இருக்கின்றேன். இப்படியான ஒரு பதிவு. அதற்கு நான் சொன்னேன் அவரது காற்புணர்ச்சி நிச்சயமாக பதில் கொடுப்பேன். நான் என்றால் சபை பதில் கொடுக்கும். அதற்காகத்தான் சபையில் கூறினேன். இந்த சபை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. நாம் ஒரு காலமும் அரசியல் நோக்கத்திற்காக எதுவும் செய்ததும் இல்லை, பேசியதும் இல்லை. நமக்குள் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம் ஆனால் அரசியலுக்காக இந்த சபை பாவிக்கப்படவில்லை. அதை முன்னாள் தவிசாளராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர் இதன் பாதிப்பு தெரியாமல் இந்த ஊருக்கு அபகீர்த்தியை இதனால் ஏற்படுத்துகின்றார் என்று தெரியாமல் என்னை தாக்குவதாக நினைத்து எழுதி இருக்கின்றார். அதன் பிரதிபலிப்பு பல கோணங்களில். நான் இன்று காலையில் பார்த்தேன் முன்னாள் உறுப்பினர் றனூஸ் அவர்களின் பதிவு. அது மிகவும் ஆழமானது. மிஸ்பாஹுல் ஹக் ஒரு பதிவு போட்டிருந்தார். இந்த பதிவுகளில் அவர் கொச்சப்படுத்தப்படுகின்றார். ஏனென்றால் இது உண்மைக்கு முரணான பிழையான நோக்கத்திற்காக செய்ததனால் அதன் பிரதிபலிப்பு செய்தவருக்கு. ஆனால் நான் சபையில் பேசிவிட்டு சபை ஒரு பதில் கொடுக்க வேண்டும் என்றால் தவிசாளர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக கொடுக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் சொன்னேன் என்னவென்றால் சபையில் தீர்மானம் இருக்கும் போது என்னிடம் Call எடுத்து கேட்ட தனியே அப்படி சொல்ல இயலாதே. நாங்கள் 20 பேருமே அடக்குவதற்கு முடிவு எடுத்து அது சம்மந்தமாக நாம் எல்லோரும் கதைத்து இருக்கின்றோம். அப்படி இருக்கும் போது தவிசாளரை குற்றம் சொல்லுவது பிழை. எங்களையும் அது தாக்கும். அதுமட்டுமல்ல அடக்குவதற்கு தடை நடந்ததா என்று கேட்டதற்கு செயலாளர் அவர்கள் சொன்னார்கள் அப்படி இல்லை என்று, நீங்கள் கடிதம் கேட்ட இடத்தில் தீர்மானம் கொடுத்தது. அதுதான் Valued 20 பேர் சேர்ந்து எடுத்த தீர்மானத்திற்கு கீழ் Forward பண்ணி கொடுத்தால் அது பெரிய valued. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது மாதிரி இந்த இடத்தில் தவிசாளர் என்று பார்க்க இயலாது. இது எங்களது சபை எல்லோரையும் ஒருமித்து குறை கூறுகின்ற மாதிரித்தான். உண்மையிலே நீங்கள் விரும்பிய இடத்தில் அடக்குங்கள் என்று சொல்லியும் இவ்வாறு சொல்லியிருப்பதை மீண்டும் சபை ஊடாக கௌரவ உறுப்பினர் வேண்டிக்கொண்டதற்கிணங்க கட்டாயம் பதில் அளிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக எனக்கு மனவருத்தம் என்னவென்றால் குடும்பத்தவர்கள் எல்லோரும் இருந்து Doctor ஆரிப், Doctor கபீர் அந்த குடும்பத்தில் ஒரு அங்கத்தவர். அவரோ என்னிடம் சொல்கின்றார். சேர் என்னிடம் 2, 3 மௌலவி சொன்ன என்ன அப்பட்டமான கதை அவர் நாங்கள் இருக்கும் போதே Water Board, Environmental Authority இற்கு Call எடுத்து இதை எப்படி செய்யலாம் என்று, அவர்களின் விதிமுறைப்படி மஜீட் MP அடக்கப்பட்டிருக்கின்ற துண்டில் மட்டும்தான் ஓரளவுக்கு செய்யலாம். ஆனால் அதை வேறு முறையில் போட்டு இந்த பிரதேசம் முழுக்க செய்யலாம் என்று சொன்னது. இதை Doctor நசீராவோ என்னுடைய உறவினர்

ஒருவரிடம் சொல்லியிருக்கின்றார் தவிசாளர் கடிதம் தர மறுத்து விட்டார் என்று, அதற்கு பின் அவருக்கு விளங்கப்படுத்தி சொன்ன ஒருவர் நேற்று வேலைக்கு போகவில்லை medical certificate தாங்கள் என்று medical certificate எழுதுவது மாதிரி இல்லை. இந்த விடயம் இப்படியாக நடந்து ஆரம்பிக்கப்பட்டது பிரதம மந்திரி அலுவலகத்தில். அந்த செய்தியை நேரடியாக சொன்னது பிரதம மந்திரியிடம். அவருடன் நெருக்கமான உவைஸ் ஹாஜியார் பிரதம மந்திரியிடம் சம்மாந்துறையில் இடம் இருக்கின்றது என்று சொன்னவுடன் அவர் எனக்கு எடுத்து அதற்கு நான் சொன்னேன் சபையில் முடிவு எடுத்துவிட்டோம் என்று, இதை ஆழம் தெரியாமல் செய்ததுதான். நிச்சயமாக ஒரு Draft ஒன்றை செய்து பத்திரிகைகளுக்கு கொடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் எங்களது பதிவு முக்கியம். பிரேரணை கொண்டு வந்த நேரமும் நான் கூறியது என்னவென்றால் எங்களது சம்மாந்துறை ஊர் பிரதேச சபையில் பிரேரணை கொண்டு வந்தது என்பது அது ஒரு பதிவு. ஆகவே பதிவின் ஆழம் தெரியாமல் அங்கத்தவர்கள் கருத்து தெரிவித்தார்களே தவிர அரசியல் நோக்கம் அதிலே இல்லை. அவ்வாறுதான் இப்போது சம்மாந்துறைக்கு இருக்கின்ற நற்பெயரை இந்த சபையின் தவிசாளரும் கெடுக்கவில்லை. தவிசாளர் No Objection Letter தரவில்லை என்று வலையத்தளத்திலே இருக்கின்றது. அதுதான் உங்கள் மீதுள்ள குற்றச்சாட்டு. எனவே அதனை மறுதளித்து உண்மையினை மக்களுக்கு தெளிவுபடுத்துவதன் மூலம் சம்மாந்துறையின் மாண்பை பாதுகாத்துக் கொள்ளலாம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற அமர்வுக்கு முன்பாக விவசாயக் காணிகளை குடியிருப்பு காணிகளாக மாற்றுவது சம்மந்தமாக ஒரு பிரேரணையை கொண்டு வந்தேன். அதற்கு ஒரு குழு ஒன்று கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது என்ன நடைமுறைப்படுத்தியது என்று எங்களுக்கு விளங்கவில்லை. அதையும் தெரிவித்தால் நல்லது என்று நினைக்கின்றேன். அடுத்தது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் வட்டாரத்தில் மல்காம்பிட்டியில் பாடசாலை ஒன்று இருக்கின்றது. அந்தப் பாடசாலை முற்றுமுழுதாக அழிவடைகின்ற நிலையில் இருக்கின்றது. ஆனால் பாடசாலைக்கு ஒரு காணித்துண்டு முன்பு இருந்ததாம். அதை மாண்புமிகு MP ஆக இருந்த அன்வர் இஸ்மாயீல் அவர்களின் காலத்தில் பாடசாலையினுடைய காணியை பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு எழுதிக் கொடுக்கப்பட்டதாம். ஆனால் அந்த பள்ளிவாசல் நிர்வாகத்தின் காணியில் வருகின்ற வருமானத்தின் ஊடாக இந்த பாடசாலையை புணர்நிர்மானம் செய்திருக்கலாம் ஆனால் புணர்நிர்மானம் செய்யவில்லை. ஆனால் அப் பாடசாலை தற்போது கூடுதலான புணர்நிர்மானத்திற்கு தள்ளப்பட்டு இருக்கின்றது. ஆகவே இந்த ஊரில் இருக்கின்ற நம்பிக்கையாளர் சபை இவைகளை பராமரிப்பது என்றால் ஊரினுடைய பொதுச் சொத்துக்களையும் கட்டாயமாக பராமரிக்க வேண்டும் அதனையும் சபை ஊடாக தெரிவிக்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கடைசியாக இருந்த பாடசாலைதான் மல்காம்பிட்டி. மல்காம்பிட்டி பாடசாலை மல்காம்பிட்டியில்தான் இருந்தது. அதற்கு ஒரு காணி இருந்து அதை அதிபர்மார்கள் தான் செய்து வந்து வருமானம் பெற்று வருகின்றார்கள் என்ற குறைபாட்டால்தான் அன்வர் இஸ்மாயீல் அவர்களின் காலத்தில் ஒரு தீர்மானம் எடுத்து கொடுத்தது. மல்காம்பிட்டி பாடசாலை இருப்பது இப்போது 20 வீட்டுத் திட்டத்தில் இருக்கின்றது. 20 வீட்டுத்திட்டத்தில் அதற்கு இருக்கின்ற குறைபாடு என்னவென்றால் பிள்ளைகள் சேருகின்ற வீதம் குறைந்துவிட்டது. அந்த நேரம் இருந்த அதிபர் மஜீட் சேர் இருந்த போது 40 வீட்டில் இருந்த பிள்ளைகளை Nursery உருவாக்கிதான் உள்வாங்கியது. இப்போது அந்த Nursery இல் இருக்கின்ற பிள்ளைகள் ஹிஜ்ரா வித்தியாலயத்திற்கு போகின்றார்கள். ஏனைய பிள்ளைகள் அஸ்ஸமா வித்தியாலயத்திற்கு போகின்றனர். சில பிள்ளைகள் இஸ்மாயீல் வித்தியாலயத்திற்கு போகின்றனர். 20 வீடு இன்னும் நிரம்ப ஆட்கள் இல்லை. அதனால் அங்கு பிள்ளைகள் இல்லை.

அங்கு இருக்கின்ற கட்டடம் நான் தான் கட்ட வைத்தேன். முதல் பள்ளிவாசலுக்குள் இருந்தது. அக் கட்டட அமைப்பே பிழை. வேறு கட்டட கலை அமைப்பு என்று சொல்லி கட்டடக்கலை அதற்குள் பள்ளிவாசலாக்கி நான் போன பிறகுதான் அக் கட்டடம் உருவாக்கி பாடசாலை உருவாக்கியது. அதில் நான் கடைசியாக Release ஆகி போனது School Development Coordinator ஆகத்தான் அங்கு போனது. இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் நீங்கள் சொல்கின்ற மாதிரி அங்கு இருப்பதை பாவிப்பதற்கு ஆட்கள் இல்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியதை உள்வாங்கியவளாக, நான் சொன்னது அங்கு பாடசாலை நடக்க வேண்டும், பிள்ளைகளை கூட்ட வேண்டும் என்பது அல்ல எனது நோக்கம். ஒரு கட்டடம் எடுக்க வேண்டும் என்றால் எங்கு எல்லாம் ஓட வேண்டும். ஆனால் இங்கு கட்டடம் இருக்கின்றது அதற்கு சிறிய ஒரு தொகையை ஒதுக்கி புணர்நிர்மானம் செய்ய வேண்டும். புணர் நிர்மானம் செய்து பாடசாலை நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி வெளியூர் மக்கள் அவ்விடத்தில் வந்து சமைத்து சாப்பிடுகின்றார்கள். அந்த இடத்தை குத்தகை அடிப்படையில் எடுத்தாலும் சரி அதற்குள் பொருட்களை வாடகை வைத்து பொருட்களை பாதுகாக்கின்ற ஒரு இடமாக பாவிக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் வலயக்கல்வி அலுவலகத்திற்கு எழுதி அதன் நிலவரம் என்ன என்பதை அறிய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக கடந்த 2020 09ம் மாதம் இடம்பெற்ற கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டு வந்திருந்தேன் மல்காம்பிட்டி வளாகத்தை புணர் நிர்மானம் செய்வது தொடர்பாக, ஆனால் தற்போது அங்கு 4, 5 குடும்பங்கள் இரவிலும் தங்குகின்றார்கள். அதே நேரம் அங்கு இருக்கின்ற வீடுகளை வெளியூரில் இருந்து இங்கு தொழிலுக்காக வருகின்றவர்கள் பாவிக்கின்றார்கள். ஆகவே அவ் இடத்தை துப்பரவு செய்து கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியவாறு பாடசாலை இயங்காவிட்டாலும் அதனை ஏதோ ஒரு வகையில் அவ் இடத்தை எமக்கு பிரயோசனமான முறையில் பயன்படுத்தலாம். கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அமர்விலே நைனாகாட்டு வீதியிலே மின் விளக்கு பொருத்துவது சம்மந்தமான பிரேரணையை முன்வைத்திருந்தேன். ஆனால் இதுவரை எந்தவிதாமன நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இன்று பல்வேறு பக்கத்திலும் என்னை தொந்தரவு செய்து கொண்டிருக்கின்றார்கள். பாடசாலை நிர்வாகம், பள்ளிவாசல் நிர்வாகம், RDS சிறிய ஊராக இருந்தாலும் அனைத்து அமைப்புகளும் இருக்கின்றது. தற்போது ஊடகவியலாளர்களும் உருவாகி விட்டார்கள். இப்படியான பல்வேறு தொந்தரவுகள் ஏற்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை நான் நேரடியாக சென்று பார்த்தேன். பிரச்சினை என்னவென்றால் LED Light என்று தொடங்குவதால்தான். அதனால் அது நடப்பதில்லை. எப்படி எப்படி செய்ய வேண்டும் என்று சுபைதீனிடம் சொன்னேன். இன்ஷா அல்லாஹ் இக் கிழமைக்குள் செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது கட்டமைப்பின் படி பொருத்துவதாக இருந்தால் 13 LED Light கள் பொருத்தினால் போதும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
LED என்னைப் பொருத்தவரைக்கும் நியாயப்படுத்த இயலாது ஏனென்றால் 12000.00 ரூபா செலவளித்து செய்வதை விட 06 இடத்தில் Light போடலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அந்த மக்கள் கேள்வி கேட்கின்றார்கள் நீங்கள் நகர்ப்புரத்தில் இருப்பதால் உங்களது நகருக்கு 04 பாதைக்கும் LED light போடுகின்றீர்கள். நாங்கள் எல்லைக் கிராமத்தில் இருக்கின்றோம் அவ்வாறு இல்லை என்று கூறுகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அதை தீர்த்து வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த கூட்டத்தில் உப அஞ்சல் அலுவலகம் சம்மந்தமாக அறிக்கை ஒன்று கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களால் கேட்கப்பட்டது. அவ்வாறு ஏதும் எமது சபையினால் கடிதப் போக்குவரத்துகள் தபால் திணைக்களத்திற்கு போயிருக்கின்றதா? இல்லையா என்பதை அறிய விரும்புகின்றேன். அப்படி இருக்குமாக இருந்தால் நான் 17ஆந் திகதி பிரதி அஞ்சல்மா அதிபதி, கிழக்கு மாகாணம் அவரது தலமையில் மட்டக்களப்பில் நடைபெற இருக்கின்றது தொழிற்சங்க தலைவர்களுக்கான கூட்டம் அதில் நான் அவரது கருத்தை கேட்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். அதன் ஒரு பிரதியை தருமாறு கேட்பதோடு, 03 மாத காலமாக ஹிஜ்ரா 1ம் வீதி எனது வீதியில் இருக்கின்ற ஓலை மட்டைகளை வெட்டச் சொல்லி பல தடவை கேட்டிருக்கின்றேன். இன்னும் வெட்டப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வெட்டப்படவில்லை என்பது பிழை. திருப்திகரமாக வெட்டப்படவில்லை என்று சொல்ல வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இல்லை. ஓலை மட்டைகள் இதுவரை வெட்டப்படவில்லை. அதே நேரத்தில் மின் விளக்குகளுக்காக சண்டை பிடிக்கின்ற வாதிடுகின்ற எங்களது உறுப்பினர்கள் இங்கு எல்லோரும் வாதிடுகின்றார்கள். இங்கு போடப்பட்ட மின்விளக்குகளின் ஒளிகள் பாதைகளுக்கு வருவதில்லை. அதனால் அவதிப்படுகின்ற பொதுமக்கள் இருக்கின்றார்கள். அது சம்மந்தமாக தெரிவித்தும் சரியான முறையில் வெட்டப்படாமல் இருக்கின்றது. அவ் உத்தியோகத்தரை அணுகி கேட்டபோது அவர் கொஞ்சம் கஸ்டப்படுகின்றார் அந்தளவு வெட்டுவதற்கு. அதற்கு பின்னால் இருக்கின்ற பிரச்சினை எனக்கு தெரியாது. தொடர்ந்து 4வது மாதமாக இது சம்மந்தமாக கூறுகின்றேன். இதே போன்றுதான் நான் முந்தநாள் பெரிய பள்ளி வாசலுக்கு முன்னாள் இருக்கின்ற மின்விளக்கும் மரத்திற்கு உள் இருக்கின்றது. ஆகவே இப்படியான குறைபாடுகளை சபையின் நிர்வாக அடிப்படையில் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌஷாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

04 பேர்ச் இற்குள்ளும் வீடு கட்டலாம். ஆனால் வீடு துப்பரவாக இருக்க வேண்டும். பிரச்சினை என்னவென்றால் 04 பேர்ச் இற்குள் வீட்டை கட்டிவிட்டு Bed Room இற்குள் Toilet pit இனை வைத்திருக்கின்றார்கள். அதுதான் பிரச்சினை. ஒரு application ஒன்று வந்தது. எனக்கு தெரிந்த ஒருவர் ஒரு சமுர்த்தி லாபி. ஒரு வீட்டுக்கு Application போடுகின்றார். அந்த Plan இல் Bed Room இற்கு காற்றோட்டம் இல்லை. அதற்கு எமது Planning Department சிபார்சு செய்தது என்னவென்றால் இந்த அறை Air Condition செய்யப்படும் பட்சத்தில் இதை Approve பண்ணலாம். இதுதான் பிரச்சினை.